# தீபகச் சுடர்

பிப்ரவரி 2025

TO SHARE THE LIGHT

தீபம் 13 சுடர் 09

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

### இயேசுவே ஒளியான அன்பு

பிப்ரவரி மாதம் நமக்கு பல விழாக்களை கொண்டாடுவதற்கான ஒரு சிறந்த காலமாக அமைந்துள்ளது. **"நம்பிக்கை"**, **"எதிர்நோக்கு"**, மற்றும் **"அன்பு"** ஆகிய இம்மூன்றையும் சிறப்பாக கொண்டாட இம்மாதம் நம்மை அழைக்கிறது.

1. ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா (பிப். 2)
2. லூர்து அன்னை திருவிழா (பிப். 11)
3. காதலர்களின் தினம் (பிப்.14) (Valentine's Day).

கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நமக்கு இம்மூன்று கொண்டாட்டங்களும் நம்மை ஆன்மீகத்தில் வளரவும், கிறிஸ்தவ வாழ்வில் வேரூன்றவும் நம்மை அழைக்கிறது.

நமது ஆண்டவரை காணிக்கையாக ஒப்புக் கொடுக்கும் விழா, இயேசு கிறிஸ்து நமக்கும், உலகிற்கும் ஒளியானவர் என்பதை நினைவுப்படுத்துகிறது. அன்னை மரியாளும் யோசேப்பும் குழந்தை இயேசுவைக் கோவிலில் கொண்டு வரும்போது, சிமியோனும் அன்னாளும் கடவுளின் திட்டத்தையும் அவரது வாக்குறுதியையும் கண்டு **"இவரே ஒளி..., இவரே மாட்சிமை..."** என அறிக்கையிட்டனர். இளைஞர்கள் ஒவ்வொருவரும் இவ்விழாவில் 'கிறிஸ்துவே நம் ஒளி, கிறிஸ்துவே நம் மாட்சிமை" என்பதையும், கிறிஸ்து நம்மை வழிநடத்தும் ஒளியெனவும், நம் இருளகற்றும் ஒளியெனவும், கிறிஸ்துவே 'உண்மை" எனவும், கிறிஸ்துவே நம் 'இலக்கு" எனவும் கொண்டாட நம்மை அழைக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம், இளைஞர்களுக்கு, உலகிற்கு ஒளியாக உண்மையாக வாழ்கிறோமா? என்று சிந்தித்துப் பார்ப்போம்.

பிப்ரவரி 11ம் தேதி புனித லூர்து அன்னை பெருவிழாவைக் கொண்டாடும் இவ்விழாவில், நமது லூர்து அன்னை நம் வாழ்வில் ஏற்படும் துன்பங்களை, சவால்களை சந்திக்க புனித பெர்னதெத்துக்கு கொடுத்த அந்த மூன்று வழிகளையே நமக்கும் நினைவுப்படுத்துகிறது: **செபவாழ்வு, தவவாழ்வு, எதிர்நோக்கான வாழ்வு.** நமது லூர்து அன்னை எப்போதும் நம்மோடு இருக்கிறார். நாம் எப்போதும் அவரின் அரவணைப்பில் இருக்கின்றோம். நாம் ஒருபோதும் தனிமையில் இல்லை. குறிப்பாக துன்பங்களிலும், வேதனைகளிலும், சவால்களிலும் அவர் நம்மோடு இருக்கிறார். இளைஞர்கள் இந்த அன்னையிடம் தங்களை அர்ப்பணித்து அவரின் பரிந்துரையால் நலமடைந்து அவரின் வழிகாட்டுதலில் நடந்து, அவரின் உடனிருப்பை நம்பி வாழ அழைக்கப்படுகின்றார்கள்.

பிப்ரவரி மாதம் காதலர்களின் தினம் (பிப்.14) (Valentine's Day) என்ற நாளை கொண்டாடுகிற இந்நாளில் 'அன்பு" என்ற சொல், அன்பு என்கிற புண்ணியம் தவறாக பயன்படுத்துவதையும் நாம் காண்கிறோம். குறிப்பாக இளைஞர்கள் அன்பை இவ்வுலகைச் சார்ந்த விருப்பு, வெறுப்புகளுக்கு ஒப்பிட்டு சுயநலத்துடன் தவறாக புரிந்துக்கொள்கின்றனர். ஆனால் 'அன்பு என்பது, நட்பு என்பது" தியாகமானது, பிறருக்காக தன் உயிரையும் கொடுக்க கூடியது. 'தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா.15:13). இளைஞருக்கு இயேசு கிறிஸ்து அன்புக்கு, நட்புக்கு உதாரணமாக வாழ்ந்து, நமக்கு பாடம் கற்றுத் தந்துள்ளார். 'அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும்; பொறாமைப்படாது; தற்புகழ்ச்சி கொள்ளாது; இறுமாப்பு அடையாது. அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது; மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும். (1கொரி.13: 4-7). உண்மையான அன்பு, தியாகத்தில், உண்மையிலும், பரிவிரக்கத்தில் நமக்கு அடுத்திருப்பவரை மதிப்பதிலும், அடங்கியிருக்கிறது என்பதை புரிந்து வாழ்கிறோமா?

பிப்ரவரி மாதத்தில் நாம் இயேசு கிறிஸ்துவை ஒளியாக ஏற்றுக்கொண்டு உண்மையான வழியில் நடந்து, உடல் உள்ள நலன் பெற்று தியாகமான, தூய்மையான அன்பை கொண்டாடி இவ்வுலகை மாற்ற நமக்கு கிடைத்த சிறந்த வாய்ப்பை சாட்சியாக வாழ்ந்துக் காட்டலாம். இளைஞர்கள் ஒளியின் சாட்சியாக, உண்மையின் சாட்சியாக, அன்பின் சாட்சியாக, எதிர்நோக்கின் சாட்சியாக வாழ நமது லூர்து அன்னை வழி காட்டுவாராக.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச

இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

02.02.2025 ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா - திருப்பலி 02

04.02.2025 புனித ஜான் தெ பிரிட்டோ (அருளானந்தர்) - திருப்பலி 03

06.02.2025 புனித கொன்சாலோ கார்சியா - திருப்பலி 05

08.02.2025 புனித ஜோசபின் பக்கித்தா - திருப்பலி 06

09.02.2025 பொதுக்காலம் 5ம் ஞாயிறு - திருப்பலி 07

10.02.2025 புனித ஸ்கொலாஸ்திக்கா - திருப்பலி 08

11.02.2025 லூர்து நகர் புனித அன்னை மரியா- திருப்பலி 09

14.02.2025 புனிதர்கள் சிரில் மெத்தோடியுஸ் - திருப்பலி 10

16.02.2025 பொதுக்காலம் 6ம் ஞாயிறு - திருப்பலி 11

17.02.2025 மரியாவின் ஊழியர் சபையை நிறுவிய புனிதர் எழுவர் - திருப்பலி 13

21.02.2025 புனித பீட்டர் தமியான் - திருப்பலி 14

22.02.2025 திருத்தூதர் புனித பேதுருவின் தலைமைப் பீடம் - திருப்பலி 15

23.02.2025 பொதுக்காலம் 7ம் ஞாயிறு- திருப்பலி 17

25.02.2025 புனித லூயிஜி வெர்சிலியா மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ - திருப்பலி 18

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புனித லூர்தன்னை தரும் செய்திகள் 19

அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் வாழ்வு தரும் பாடம் 21

தவக்காலத்தில் நாம் என்ன செய்யப்போகிறோம்? 23

திருஅவைச் செய்திகள் 24

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 02.02.2025 ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. மலா. 3: 1-4 II. எபி. 2: 14-18 லூக். 2: 22-40

இறையேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே, ஆண்டவர் இயேசுவைக் காணிக்கையாக அர்ப்பணிக்கும் நாளைச் சிறப்பிக்கும் இந்நாளில் நற்செய்தி மூன்று நபர்களைக் கண்முன் நிறுத்துகிறது. ஒருவர் **இயேசுவைச் சுமந்தவர்:** அன்னை மரியா, மற்றவர் **இயேசுவுக்காகக் காத்திருந்தவர்:** அன்னா, மூன்றாமவர் **இயேசுவைப் பற்றி பேசியவர்:** சிமியோன். இம்மூவரின் வாழ்வும் அர்ப்பணத்தின் மேன்மையை எடுத்துரைக்கின்றது. இறைவனுடைய திருவுளத்திற்கு "ஆம்" என்று தலையசைத்த அன்னை மரியா, தன் வாழ்வின் இறுதி நொடிவரைத் தன் அர்ப்பணத்தில் நிலைத்திருந்தார். தன் நேர்மையிலும், இறைப்பற்றிலும் நிலைத்திருந்த சிமியோன், இறைப்பிரசன்னத்தில் வாழ்ந்தார், தனிமையிலும், வயோதிக்கத்திலும் ஆலயம் விட்டு நீங்காத அன்னா, இறையன்பில் நிலைத்திருந்தார். முதல் வாசகத்தில் இறைவாக்கினர் வாயிலாக வாக்களித்த மீட்பை இறைவன் தம் மகன் வழியாக நிறைவேற்றுகின்றார். கடவுளுக்கான தம் மாட்சி அனைத்தையும் துறந்த இயேசு, நம் அனைவரையும் போலவே சோதனைக்கு உள்ளாக்கப்படும் மனிதரானார். தம் நம்பிக்கையாளர்களுக்கு வழங்கிய வாக்கினை குறையின்றி இறைவன் நிறைவேற்றுகின்றார். இறைவனின் உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்ட நாம் அவராக வேண்டுமென்று அவர் "நாம்" ஆனார். நாம் "அவராக" மாறுவதற்காக அவரையே ஆண்டவருக்கு அர்ப்பணிக்கும் இந்நிகழ்வு நம்பிக்கையின் முழுமையாகிறது.

இரண்டாம் வாசகத்தில் ஆண்டவரின் ஊனும், இரத்தமும் கொண்ட நம்மைப்போல், நம் அனைவரோடும் ஒன்றாகி நமது பாவங்களுக்கு அவர் கழுவாயாக மாறியது. இதுவே அன்னை மரியாவின் உள்ளத்தை ஊடுருவும் வாள். சிமியோன் மற்றும் அன்னாவைப்போன்று கடவுள்மேல் கண்களைப்பதித்து வாழ்பவர்களே உண்மையில் அர்ப்பணமானவர்கள். இன்றைய திருப்பலியில் ஒளிசிந்தும் மெழுகுத்திரிகளைச் சுமக்கும்போது, நாம் ஒவ்வொருவரும் இறைவனின் ஒளிக்கீற்றுகள் என்பதை உணர்ந்து ஒளிர்ந்திடுவோம், ஒளி கொடுப்போம். நம்மை நாமே காணிக்கையாக்கி பக்தியோடு இன்றைய திருவிழாத் திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பாதுகாப்பின் பரம்பொருளே எம் இறைவா, உம் அடியார்களாகிய திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் இன்றைய காலச்சூழ்நிலைக்கேற்ப தங்களை மாற்றிக்கொண்டு உம்

பிரசன்னத்தை முழுமையாக உணர்ந்து செயல்பட தூய ஆவியாரின் அருள்கொடைகளை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்கள் பாதுகாவலரே இறைவா, எம்மை நாடித்தேடி வரும் உம் திருமகனை நாங்கள் எதிர்கொள்ளவும், அவர் பொருட்டு பெருமிதம் கொண்டிடவும், நாங்கள் எங்களையே உம் திருமகனுக்குப் பலியாக தந்து, வருகின்ற சோதனைகளை, முழு பலத்தோடும், முழு நம்பிக்கையோடும் எதிர்கொண்டு செயல்பட வேண்டிய அருளைப்பொழிந்து பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. உமது அருள்கொடைகளை பெற்ற நாங்கள் உமக்கேற்ற பாதையில் நாளும் நடந்து, தன்னுடன் இருப்பவர்களையும், எங்களின் வாழ்வின் முன்மாதிரிகையால் உமது பாதையில் நாளும் வழிநடத்தி, முகமுகமாய் தரிசித்து உம் அருள்கொடைகளைப் பெற்று, வாழ்வில் நலமோடும் வளமோடும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. படைத்தவரே எம் இறைவா, நீர் படைத்தவை அனைத்தும் இன்று சீர்குலைந்துக்கொண்டிருக்கின்றன. மனிதன் தன்னுடைய சுயநலத்தால் மனித உயிர்களையும், இயற்கையும், உயிர்வாழ் விலங்கினங்களையும் அழித்து வரும் சூழ்நிலை மாற, நீரே அருள்கூர்ந்து காத்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 04.02.2025 புனித ஜான் தெ பிரிட்டோ (அருளானந்தர்) திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

இறையேசுவில் நிறையன்புள்ளவர்களே, இன்று தாயாம் திருஅவை மறைசாட்சியான புனித அருளானந்தர் விழாவினை சிறப்பிக்கிறது. ஜான் பிரிட்டோ என்றழைக்கப்படும் நம் புனிதர் புகழ் பெற்ற போர்த்துகீசிய உயர் குடும்பத்தில் 1647 மார்ச் 1ம் தேதி லிஸ்பன் நகரில் பிறந்தவர். இவருடைய தந்தை சால்வடோர் பிரிட்டோ பெரீரா போர்த்துக்கல் நாட்டின் காலனியாக இருந்த பிரேசிலின் ஆளுனராக இருந்தவர். ஜான் பிரிட்டோ 1662 ஆம் ஆண்டு இயேசு சபையில் சேர்ந்து கொயிம்பிரா பல்கலை கழகத்தில் கல்வி கற்றார். 1963ல் தென்னிந்தியாவில் தமிழகத்தில் மதுரை மாநகரில் மறைப்பரப்பு பணிக்காக தனது கால் பதித்தார். அங்குதான் ஜான் பிரிட்டோ என்ற தனது பெயரை தமிழில் அருளானந்தர் என மாற்றிக் கொண்டார். மறவர் சீமை மன்னரால் ஐரோப்பாவுக்கு நாடுகடத்தப்பட்டு பின்னர் 1690ம் ஆண்டு மீண்டும் மதுரைக்கு வந்தார். மதுரையில் அவர் இந்து சமய துறவிகளைப் போல மஞ்சள் நிற ஆடை உடுத்தி, இறைச்சி உண்ணாமை, மது அருந்தாமை போன்ற பழக்க வழக்கங்களை பின்பற்றினார். கத்தோலிக்க நெறிமுறைகளை பாமர மக்களுக்கு புரியும் விதத்தில் எடுத்துரைத்தார். வீரமாமுனிவர் என்றழைக்கப்பட்ட இராபர்ட் தே நொபிலி பின்பற்றிய எளிமையான போதனா முறைகளையே இவர் தனது நற்செய்தி அறிவிப்பு பணியில் பின்பற்றினார்.

திருத்தந்தை 9ம் பத்திநாதரால் 1853 ஆகஸ்ட் மாதம் 21ம் தேதி நம் புனிதருக்கு அருளாளர் பட்டமும் திருத்தந்தை 12ம் பயஸ் அவர்களால் 1974 ஜீன் 22ம் நாள் புனிதர் பட்டமும் வழங்கப்பட்டது. இவர் போர்த்துக்கல் நாட்டின் சவேரியார் என்றும் அழைக்கப்பட்டார். 1693ல் தென் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் ஓரியூரில் தலை வெட்டப்பட்டு இறந்தார் திருச்சபையில் அந்த நாளை ஆண்டு தோறும் புனிதரின் விழாவாக கொண்டாடப்படுகிறது. எனவே, புனிதரின் அஞ்சா நெஞ்சமும் அயராத உழைப்பும் இன்று நம் அனைவரின் விசுவாச வாழ்விற்கு சிறப்பான படிகற்களாக அமைந்திருக்கின்றன. நமது வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இறைப்பற்றுதலோடும் தாழ்ந்த உள்ளத்தோடும் இறையருளைப் பெறுவோம் நம் குடும்பங்களை இறைவன் தம் புனிதர் வழியாக ஆசீர்வதிக்கவும் துணிவோடு ஆண்டவர் இயேசுவுக்கு சாட்சிகளாக மாறுவோம் என்ற விசுவாசத்தோடு இன்றைய திருவழிபாட்டில் பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆறுதலின் தெய்வமே எம் இறைவா, எம் தாயாம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் யாவரும் இறையாட்சியின் மதிப்பீடுகளை இவ்வுலகில் மலரச் செய்யும் சொல்லேற் உழவர்களாக திழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

2. அனைத்துலகின் மீட்பரான ஆண்டவரே எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் தலைவர்கள் அனைவரும் நீதியிலும் அன்பிலும் கலங்கமில்லா அமைதியான நல்லாட்சிப் புரிந்திடவும், புனித அருளானந்தரின் முன்மாதிரியை பின்பற்றி துணிவோடும் நல்ல ஞானத்தோடும் பிறரன்பு செயல்களில் சிறந்திட வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

3. காக்கும் வல்லமையுள்ள எம் இறைவா உலகெங்கும் உள்ள கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் , எளியோர், விதவைகள் அனைவருக்கும் நீர் உமது இறைபராமரிப்பையும், பரிவன்பையும் நிறைவாக பொழிந்துக் காத்திடவும் உமது அன்பான பாதுகாப்பில் தங்களின் அனைத்து துன்பங்களிலிருந்தும் கவலைகளிலிருந்தும் விடுபட்டு துணிவோடு உம்மை மகிமைப்படுத்த தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம.

4. ஞானத்தின் ஊற்றான எம் ஆண்டவரே, குழந்தைகளுக்கு உமது அளவில்லாத அன்பையும், சிறார்களுக்கு நல்ல ஞானத்தையும் இளையோருக்கு எதிர்காலத்தையும், வழிக்காட்டுதலையும் முதியோருக்கு பாதுகாப்பையும் கொடுத்து உமது இறை பிரசன்னத்தை நாளும் உணர்ந்து உம்மிலே நிறைவு பெற்றுக் கொள்ளத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 06.02.2025 புனித கொன்சாலோ கார்சியா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று புனித கொன்சாலோ கார்சியா அவர்களின் திருப்பலியை நிறைவேற்ற ஒன்றுக் கூடியிருக்கின்றோம். இவர் ஜப்பான் நாட்டில் நாகசாகியில் 1897ம் ஆண்டு பால் மிக்கி என்பவரும் அவரோடு மற்ற 23 பேரும் மறைசாட்சிகளாய் இறந்தனர். இவர்களில் 3பேர் இயேசு சபையினர், 6பேர் பிரான்சிஸ்கன் சபையினர், 7பேர் புதிதாக மனந்திரும்பிய இல்லற வாசிகள் மற்றும் இளைஞர்கள். இவர்களுள் ஒருவர் இந்தியாவை சார்ந்த கொன்காலோ கார்சியா நாகசாகி மலைக்குன்றின்மீது 26 சிலுவைகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஒவ்வொன்றுக்கும் அருகில் அதை மறைசாட்சிகளுடன் சேர்த்துக்கட்டி நிறுத்துவதற்கு குழிகள் தோண்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வேத சாட்சியின் உடலிலும் ஈட்டியைப் பாய்ச்ச ஒரு கொலையாளி நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு மறைச்சாட்சியின் உடலிலும் 2 ஈட்டிகளால் மார்பு வழியாக (ஓ வடிவில்) துளைக்கப்பட வேண்டியிருந்தது. ஒருபுறம் துளைக்கப்பட்டு மறுபுறம் ஈட்டி வரவேண்டும். மறைசாட்சிகள் இந்த குன்றுக்குள் மகிழ்ச்சியோடு "தெதேயும்" என்ற நன்றிப்பாடலைப் பாடிக்கொண்டு வந்தடைந்தார்கள். பின்னர் ஒவ்வொருவராக சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டனர். கிறிஸ்துவுக்காக எங்களை கொல்பவர்களை மன்னிக்கிறேன் என்று சொல்லி குருதி சிந்தி உயிர் துறந்தனர். கல்வாரியில் பலியான கிறிஸ்துவின் பெயருக்காகக் குருதியைச் சிந்தினார்கள் என்பதை யாரால் மறுக்க இயலும்? இறை இயேசுவில் இனியோரே, இன்றைய நாளின் புனிதர்களாகிய இந்த மறைசாட்சிகளை நினைவில் கொண்டு இத்திருப்பலியில் இறைவனோடு புனிதர்கள் கொண்டுள்ள நெருங்கிய உறவாலும் அவர்களோடு நாம் கொண்டுள்ள அன்புறவோடும், நம்மை இணைக்க இத்திருப்பலியில் அனைவரும் இணைந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் ஆகிய அனைவரும் ஆயனில்லா ஆடுகள்போல தவிக்கும் மக்கள்மீது பரிவுகொண்டு அவர்களை இயேசுவின் அன்பான தூய பாதையில் வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எங்களையும் எங்கள் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் உம் பாதம் வைக்கிறோம். அவற்றை உமது கரத்தால் தொட்டு ஆசிர்வதியும். உமது தூய ஆவியைப் பொழிந்து உம் பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அதிசயங்களின் தேவனே இறைவா, திருச்சபையின் அங்கங்களாக இருக்கும் இளைஞர்கள், திருச்சபையைக் கட்டியெழுப்பும் சிறந்த ஊழியர்களாக திகழ அவர்களுக்கு வேண்டிய ஞானத்தையும், இறைபற்றும் நிறைவாக பொழிந்து ஆர்வம் நிறைந்தவர்களாக திருச்சபைக்கு செயலாற்ற வேண்டிய திறமையை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 08.02.2025 புனித ஜோசபின் பக்கீத்தா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது "எங்கள் கறுப்புத் தாய்" என எல்லோராலும் அழைக்கப்படும் புனித ஜோஸ்பின் பக்கித்தாவின் விழாவை கொண்டாடுகிறது. ஆப்பிரிக்கரான இவர் வழக்கம் போல் கடத்தலுக்குள்ளாகும் ஆப்பிரிக்க ஏழைகளுள் ஒருவராக அடிமைச் சந்தையில் விற்கப்பட்டு, உடல், மன ரீதியில் பல கொடுமைகளை சந்தித்தார். சூடானில் இருந்த இத்தாலியைச் சார்ந்த கலிஸ்தோ என்பவரால் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டு இத்தாலியில் அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்குதான் பக்கித்தா முதன் முதலில் அன்பை, அமைதியை கண்டுணர்ந்தாள். 1890ல் திருமுழுக்குப்பெற்று, பின்னாலில் இறைப்பணிக்காகத் தன்னையே கையளித்தாள். ஐம்பது ஆண்டுகள் கடவுளின் அன்புக்குச் சாட்சியாக வாழ்ந்தார். அவரது வார்த்தைகள், "நல்லவராக இருங்கள், ஆண்டவரை அன்பு செய்யுங்கள், அவரை அறியாதவர்களுக்காக மன்றாடுங்கள், அவரை அறிவியுங்கள். கடவுளை அறிவதே மிகச் சிறந்த அருளாகும்" என்பதே. எங்கள் அன்னை மரியே... எங்கள் அன்னை மரியே.. என்று உச்சரித்த உதடுகளுடன் 1947 பிப்ரவரி 8ல் மறைந்தார். 2000ல் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் இவரை புனிதராக உயர்த்தினார். ஆதிக்க சக்திகளின் முகவரியாக இன்றும் தொடரும் அடிமை முறைக்கும், ஆள்கடத்தல்களுக்கும் இலக்கானவர்களுக்காக சிறப்பாக அருட்தந்தை டாம் ச.ச. அவர்களுக்காக புனித ஜோஸ்பின் பக்கித்தாவின் வழியாக மன்றாட தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்ல ஆயன் நானே, நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார் என்று சொல்லி மனமுவந்து பாடுகளை, சாவைச் சந்தித்த அன்பு இயேசுவே, துன்பங்களை கண்டு பின்வாங்காமல், அதை எதிர்த்து போராடும் துணிச்சலும் ஆற்றலும் எமக்குத்தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இயேசுவின்மீது கொண்ட நம்பிக்கையினால் வேறுபாடுகளைக் கடந்து இறைமக்களாகிய நாம் அனைவரும் இறைவனின் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் தந்தையே, உமது முன்னிலையில் எமக்கு எப்போதும் நிறைவான மகிழ்ச்சி உண்டு, உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு என்பதை நாங்கள் உமது வாழ்வின் வழியை அறிந்து கொள்ளவும் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 09.02.2025 பொதுக்காலம் 5ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா. 6: 1-8 II. 1கொரி. 15: 1-15 லூக். 5: 1-11

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, பொதுக்காலம் 5ம் ஞாயிறை இன்று நாம் இத்திருப்பலியில் பங்கேற்று பலன்பெற கூடி வந்துள்ளோம். இன்றைய மூன்று வாசகங்களும் இறையழைத்தலின் இனிமையை நம் காதுகளில் தவழவிடும் தேனடைகளாக இருக்கின்றன. தன் தகுதியின்மையை இழந்த எசாயா, புனித பவுல் மற்றும் புனித பேதுரு ஆகியவர்களின் நிலையைப் பார்க்கிறோம். முதல் வாசகத்தில் அழைப்பு பெற்றவர் தன் தகுதியின்மையை வெளிப்படுத்தினாலும் ஆண்டவர் அவர்களை விட்டு விலகுவதில்லை. அவர்களைத் தூய்மைப்படுத்தி தன் அழைப்புக்கு தகுதியுள்ளவர்களாக்குகின்றார். இங்கு எசாயா இறைவாக்கினரின் இறையழைத்தலைப் பார்க்கிறோம்.

இரண்டாவது வாசகத்தில், இயேசுவின் உயிர்ப்பின் வல்லமையையும், உயிர்த்த இயேசு யாருக்கெல்லாம் தோன்றினார் என்பதையும் எடுத்துக்கூறும் புனித பவுல் தான் திருத்தூதனாக அழைக்கப்படும் தகுதியின்மையை ஏற்றுக்கொள்கிறார். கடவுளின் அருளால் நற்செய்திக்காகப் பாடுபட்டு உழைக்க முடிந்தை புனித பவுல் இத்திருமுகத்தின் வாயிலாக வெளிப்படுத்துகிறார். நற்செய்தியில் அழைப்பின் முத்தாய்ப்பை "இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" என்று மக்கள் பணிக்கான உத்தரவை இயேசு புனித பேதுருவுக்கு விடுக்கின்றார். இவர்களின் அழைப்பை பற்றிய அறிந்த நாம், இறைவன் எம்மை எப்பணிக்கு தகுதியுள்ளவர்களாக இருக்கின்றோம் என்ற சிந்தனையை மனதில் கொண்டு இறைவனின் அழைப்பிற்கு செவிமடுத்து அவரின் பணி செய்ய இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நலமெல்லாம் நல்கிடும் இறைவா, நற்செய்தி அறிவிப்புப் பணிக்கென சிறப்பு அழைப்பினைப் பெற்ற திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் சுயநல தகுதிக்காக பணிபுரியாமல் உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்டவர்கள் என்பதை மனதில் கொண்டு செயல்பட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் வடிவே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் தங்களுக்கென்று வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளின் தன்மையை உணர்ந்து ஊழல், லஞ்சம், ஏற்றத்தாழ்வுகளை மறுத்து மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை வழங்கும் பரந்த மனம் கொண்டவர்களாக செயல்பட உம் அருளாசீரைப் பொழிந்தருள மன்றாடுகிறோம்.
3. தேவ அழைத்தல் அதிகரிக்க மக்களின் மனங்களை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். மீன்பிடிப்போரை மனிதர்களைப் பிடிப்பவர்களாக மாற்றியவரே, இன்றைய இளைஞர்களை நற்செய்திப் பணிபுரியவும், உம் திருவுளத்திற்கேற்ற பாதையில் நாளும் தங்களை வழிநடத்திடத் தேவையான அருள்வரங்களைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, மனித வாழ்வை போராட்டமாக நினைத்து, கண்ணீரோடும், கவலைகளோடும், தூக்கமின்றி போராடும் உம் மக்கள் அனைவரையும் ஆசீர்வதித்து உடைந்துபோன உள்ளத்தையும், வலுவிழந்த உடலையும் உமது கருணையினால் வலுவூட்டி நம்பிக்கையளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 10.02.2025 புனித ஸ்கொலாஸ்திக்கா நினைவு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

அன்புக்குரிய இறைமக்களே, நமது தாயாம் திருச்சபை இவ்வுலக வாழ்வில் இறைவனோடு இணையில்லா வாழ்க்கை வாழ்ந்தவர்களை நமக்கு முன்னோடிகளாக பிரகடனப்படுத்துகிறது. அவ்வாறு, இன்றைய நாளில் நாம் நினைவு கூறுபவரான தூய கொலாஸ்திக்கா கி.பி. 480ம் ஆண்டு பிறந்தவர். இவர் தூய ஆசீர்வாதப்பரின் தங்கையாவார். தூய ஸ்கொலாஸ்திக்கா வாழ்ந்து வந்த கன்னியர் இல்லத்திற்கும், தூய ஆசீர்வாதப்பர் வாழ்ந்து வந்த துறவிகள் இல்லத்திற்கும் 5மைல் தொலைவு இருந்தது. கடவுளைப்பற்றியும் பரலோகத்தைப் பற்றியுமே இவர்கள் பலமுறை சந்தித்து பேசுவார்கள். ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும்போது அதிக நேரமாகி விட்டதால் ஆசீர்வாதப்பர் செல்ல முயன்றார். அப்போது தங்கை ஸ்கொலாஸ்திக்கா அங்கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டார். அவரோ மறுத்ததால் தங்கை கடவுளை மன்றாடினார். ஏனென்றால் தன் அண்ணன் ஆசீர்வாதப்பருடன் இதுவே கடைசி சந்திப்பு என்று அவர் உணர்ந்திருந்தார். அவருடைய மன்றாட்டை கடவுள் கேட்டார். இடியுடனும், சூறாவளி காற்றுடனும் மழை பெய்தது. கடவுளைப் பற்றி பேசுவதில் இருவரும் இரவு முழுவதையும் செலவழித்தார்கள். இடிமழை நின்றது, பொழுதும் விடிந்தது, காலையில் ஆசீர்வாதப்பர் தம் துறவிகள் இல்லத்திற்குச் சென்றார். மூன்று நாட்களுக்குப்பின் ஸ்கொலாஸ்திக்கா மரணமடைந்தார். அவருடைய

ஆன்மா மாடப்புறா வடிவில் பரலோகத்திற்குச் செல்வதை ஆசீர்வாதப்பர் கண்ணால் கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தினார். நாமும் இவ்வுலக வாழ்வில் பற்றுக்கொள்ளாமல், கடவுளைப்பற்றியும், நிரந்தர வாழ்வைப் பற்றியும் மனதில்கொண்டு பக்தியுடன் வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவருக்கே பணி செய்வாயாக (லூக் 4:8) என மொழிந்த இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் விசுவாச தளர்ச்சியும், மனச்சோர்வும் ஏற்படும்போது உயிருள்ள இறைவார்த்தை வழியாக எங்களைத் திடப்படுத்தும் ஞானத்தை அவர்களுக்கு அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆண்டவரே எங்கள் ஒளி, அவரே எங்கள் மீட்பு என உணர வைத்த இறைவா, பசித்தவர்கள்மீது பரிவு கொண்டு அற்புதமாக உணவு தந்து பசியை நீக்கியதுபோல் இன்று பசியால் வாடும் கோடிக்கணக்கான மக்களின் துயரை துடைக்கவும், வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை நாடும் மக்களும் செயல்படுத்திட வேண்டிய அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்புத் தந்தையே இறைவா, செவிடரைக் கேட்க வைத்தீர், ஊமையரை பேச வைத்தீர், ஆனால் நாங்களோ எல்லாமிருந்தும் உம் அருள் வார்த்தையை கேட்காமல் உம் நற்செய்தியை அறிவிக்காமல் உமக்கெதிராகப் பாவம் செய்ததை மன்னித்து, உம் இறையரசின் தெய்வீகப் பாதையில் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 11.02.2025 லூர்து நகர் புனித அன்னை மரியா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

இன்று திருஅவை புனித லூர்து அன்னையின் திருவிழாவை கொண்டாடுகிறது. கி.பி. 1858ம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாள் தென் பிரான்ஸ் நாட்டில் ஒரு மலையடிவாரத்தில் லூர்து என்ற சிற்றூருக்கு அருகில் குன்றுகளுக்கிடையே முதன் முறையாக பெர்னதெத் என்ற 14வயது சிறுமிக்கு விறகு சேகரிக்க சென்ற இடத்தில் கன்னிமரியா காட்சிக் கொடுத்தார். தொடர்ந்து 17முறை காட்சியளித்து "நாமே அமல உற்பவம்" என்று அறிவித்தார். காட்சிகளிளெல்லாம் பாவிகளுக்காக மன்றாட பணித்தார். செபத்துடன் தவமுயற்சிகள் இன்றியமையாதவை என்று நினைவுப்படுத்துகின்றார். அங்கு ஆலயம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அந்த இடத்தில் சுரக்கும் நீருற்றினின்று இன்றுவரை ஓடிவரும் தண்ணீர் இந்நீரில் விசுவாசத்தோடு இறங்குவோர் அதை பருகுவோர் முழுமையாக பலதரப்பட்ட நோய்களிலிருந்து குணம்பெறுகின்றனர்.

"உலகின் எத்திசையிலிருந்தும் எண்ணற்ற திருப்பயணிகள் அங்கு செல்கின்றனர். ஆயிரக்கணக்கான புதுமைகள் நடைபெறுகின்றன. திருத்தந்தை 9ம் பத்திநாதர் "தேவ அன்னை அமல உற்பவி பாவமாசு எதுவுமின்றி உற்பவித்தார்" என்று விசுவாச அறிக்கை வெளியிட்டார். இதை நம் அன்னையிடம் ஆகட்டும் என்று உம்மோடு ஒன்றித்து உம் பிள்ளையாக வாழ முயற்சி செய்ய வரம் தர செபிப்போம். புதுமைகளை காண்போம். செபத்தில் நிலைத்திருப்போர் புண்ணியங்களை காண்பர் என்ற அன்னையின் வாக்குறுதிக்கேற்ப எண்ணங்களை நிறைவேற்ற அருள்தர இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

4. அன்பு தந்தையே, எம் திருச்சபையின் தலைவர்கள் இறைமக்கள்மீது அக்கறைக்கொண்டு திடமான விசுவாசத்திலும், பக்தியிலும் உற்சாகமூட்டி வழிநடத்த அவர்களுக்கு உமது ஞானத்தையும் ஆற்றலையும் தர தூய லூர்து அன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
5. நீதியும், நேர்மையுமான இறைவா, அன்னை மரியாவின் பாடலில் வெளிப்பட்ட பெண் சமத்துவம், பெண்விடுதலை, பெண்ணுரிமை ஆகிய மதிப்பீடுகளில் மனித மாண்பை நோக்கி அன்னை மரியாவின் ஆன்மீக வழியில் புதியதோர் சமூகம் காண வரமருள தூய லூர்து அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
6. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, தமிழகத்தில் வாழும் ஏழை எளிய விவசாயிகளின் ஏக்கங்களையும், மனஉளைச்சல்களையும், கவலை, கண்ணீர் ஆகியவற்றையும் நீக்கி தேவையான நல்ல மழையை பொழிந்து அவர்களுக்கு ஆறுதலையும், மனஉறுதியையும் தந்து தேவையான அனைத்து பொருளாதார உதவிகளும் பெற்று நலமுடன் வாழ தூய லூர்து அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 14.02.2025 புனிதர்கள் சிரில், மெத்தோடியுஸ் திருப்பலி

**முன்னுரை**

திரு. சாம்சன்

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்றைய புனிதர்களான தூய சிரில், மெத்தோடியுஸ் இருவரும் சகோதர்கள் இவர்கள் தெசலோனிக்கா என்ற ஊரில் உயர்ந்த குடும்பத்தில் தோன்றி இளமை முதல் இறைவனுடன் ஒன்றி வாழ்ந்து வந்தனர். சிரில் தமது அறிவுத் திறமையால் எல்லா கலைகளையும் கற்றுத் தேர்ந்து, "வல்லுநர்" என்னும் பட்டத்தைப் பெற்றவர். பிறரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைத்தவர். மெத்தோடியுஸ் துறவற நிலையைத் தெரிந்துக் கொண்டார். இருவரும் மக்களுக்கு மெய்மறையைப் போதித்தனர். பல்கேரிய நாட்டு மன்னன் தன்னுடைய புதிய அரண்மனைக்கு ஓவியக்கலையில் தேர்ந்த மெத்தோடியுசை ஒரு படத்தை வரையும்படி கேட்டுக் கொண்டான்.

மெத்தோடியுஸ் பொதுத்தீர்வை படத்தை வரைந்து அதன் பொருளையும், அரசனுக்கு விளக்கினார். அரசரும் நடுக்கத்தோடு மெய்மறையைத் தழுவி திருமுழுக்கு பெற்றார். இரு சகோதர்களும் பல நாடுகளுக்குச் சென்று, மிகுந்த ஆர்வத்தோடு இயேசுவைப்பற்றியும் மெய்மறையையும் போதித்தனர். கணக்கில்லாத மக்கள் மனம் திரும்பினர். இதைக் கண்ணுற்ற திருத்தந்தை இவர்களுக்கு ஆயர் பதவியை வழங்கினார். சிரில் உரோமுக்கு திரும்பிவரும் வழியில் நோயினால் இறந்தார். அதற்குப் பின் நீண்ட காலம் திருச்சபைக்காக உழைத்த மெத்தோடியுஸ் பல எதிர்ப்புக்களைத் திருச்சபைக்குள்ளேயே சந்தித்தாலும் அத்தகைய துன்பங்களின் இடையே ஸ்லாவிக் மொழியில் விவிலியம் முழுவதையும் மொழி பெயர்த்தார். இதன் பின்னர் புனித வாரத்தில் இறைவனடி சேர்ந்தார். இவ்விருவரைப் போல் சிரமத்தையும் களைப்பையும் பாராமல் கடவுளின் மகிமைக்காகவும் மக்களின் ஈடேற்றத்திற்காகவும் இறுதிவரை உழைப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விசுவாசத்தின் ஊற்றே இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவியர் மற்றும் திருநிலையினர் அனைவரும் நம்பிக்கை என்னும் கவசத்தை விட்டுவிடாமல் கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை இறைமக்களிடம் பரப்பி தூய்மையான வாழ்வு வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் நாயகனே இறைவா, ஆதரவற்ற நிலையில் கருணை இல்லங்களில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் குழந்தைச் செல்வங்களை உம் கரம் சமர்ப்பிக்கின்றோம். தன்னிலை மறந்து நம்பிக்கை நாயகனாம் இயேசுவின்பால் அன்பு கொண்டு மன மகிழ்வுடன் இவர்கள் வாழ வேண்டிய மனநிலையை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. பெயர் சொல்லி அழைத்த இறைவா, புனித சிரில் புனித மெத்தோடியுஸின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு எம் பிள்ளைகள் இறையழைத்தலை உணர்ந்து உமது பணிக்காகத் தங்களையே அர்ப்பணிக்கும் நல் உள்ளத்தைத் தந்தருளை வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 16.02.2025 பொதுக்காலம் 6ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

I. எரே. 17: 5-6 II. 1கொரி. 15:12, 16-20 லூக். 6: 17, 20-26

இறையேசுவின் இனிய இறைமக்களே, "ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டவர் பேறுபெற்றவர்" இன்று நாம் திருஅவையின் கூற்றின்படி பொதுக்காலம் 6ம் ஞாயிறு திருப்பலியைச் சிறப்பிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவரிடம்

நம்பிக்கைக் கொண்டவர்களாக திகழ அழைக்கப்பட்டுள்ளோம். வலுவற்ற மனிதரில் நம்பிக்கைக் கொள்ளும்போது அது நேராதபோது ஏமாற்றப்படுகிறோம். ஆனால் ஆண்டவரில் நம்பிக்கைக்கொள்ளும்போது பேறுபெற்றவராயிருந்து வரங்களை பெற்றுக்கொள்கிறோம். அந்நம்பிக்கை பொய், கலப்படமற்றதாய் இருக்கும்போது. இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுழுகத்தில் இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றார். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கை நம் உயிர்ப்பையும் உறுதிப்படுத்துகின்றது என்றே அறிவிக்கின்றார். கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலகை மட்டும் சார்ந்திருந்தால் எல்லா மக்களையும்விட இரக்கத்திற்குரியவர்களாக இருப்போம். ஆனால் இறந்த கிறிஸ்து "உயிருடன் எழுப்பப்பட்டார், நாமும் உயிருடன் எழுப்பப்படுவோம் என்பது உறுதிப்படுத்துகிறது.

நற்செய்தியாளர் லூக்காவும் இயேசுவின் மலைப்பொழிவை, இறைப்பிரசன்னத்தை, இறையாட்சியின் மாண்பை பிரகடணப் படுத்துகின்றார். இயேசுவின் திருவார்த்தைகளில் ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டோருக்கு அவர் கொடுத்த நம்பிக்கைமிக்க அழைப்பே, நம்பிக்கையின் மலைப்பொழிவு ஆணிவேராக அமைகிறது. "மரியாவின் பாடல்" மூலம் இம்மேற்கோள்கள் அமைகிறது. கடவுள் ஏழை எளியோரின்மேல் தம் இரக்கத்தையும் தாராள குணத்தையும் காட்டுகிறார். தம் நற்செய்தியை தருவரோடு அதில் அவர்களைப் பங்கெடுக்க வைக்கின்றார். பணம் படைத்தவர்களுக்கெல்லாம் எச்சரிக்கை விடுக்கின்றார், கண்டன குரல் எழுப்புகிறார். பணக்காரரின் மனமாற்றம் பற்றியோ, அல்லது ஏழையரின் நல்வாழ்வைப்பற்றியோ நேர்முகமாக கூறாது, வாழ்க்கையின் திருப்பு முனை என்ற வாக்குறுதியை பதிக்கின்றார். ஆகவே, இறைவனில் நம்பிக்கை வைத்து அவரது திருவார்த்தைகளை, மதித்து அவரது வழிநடக்க இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வழிநடத்தும் அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவருக்கும் நல்ல உடல் நலமும், ஆன்ம நலமும் தந்து, இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதில், உறுதியோடும், உற்சாகத்தோடும் பணிபுரிந்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. ஏழையரின்மீது மிகுந்த அன்பு காட்டும் இறைவா, இப்பரந்த உலகில் உம்மை அறிந்தும் அறியாமலும் வாழும் எண்ணற்ற எளிய மக்களை உம் கரங்களில் ஒப்புவிக்கின்றோம். அவரவர் தேவைகளை சந்திக்கக் கூடிய வலிமையும், மன ஆற்றலையும், உறுதிப்பாட்டையும் அளித்து தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டிய துணிவைத் தரவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. வலுவின்மையில் வல்லமை கிடைக்கும் என்றவரே, நாட்டில் குறைந்துக் கொண்டு வரும் விவசாயம், அதனால் பாதிக்கும் மக்களையும், குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை கிடைக்கவும், உடல் நோயினால் வாடும் மக்களை உம்கரம் ஒப்புவித்து உமது ஆசியை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கமே உருவான இறைவா, குடும்ப வாழ்வில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், வெறுப்புணர்வுகள், தீராத பிரச்சனைகள், பண கஷ்டங்கள், நோய்கள் போன்றவைகளிலிருந்து விடுதலையளித்து பாதுகாத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.02.2025 புனித கன்னிமரியாவின் ஊழியர் சபையை நிறுவிய புனிதர் எழுவர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இன்று மரியின் ஊழியர் சபையை நிறுவிய எழுவரின் விழாவை சிறப்பாக கொண்டாட அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன். ஒரு ஜென் துறவி அமர்ந்த இடத்தின் அருகில் ஒரு நாயும் அமர்ந்திருந்தது. அப்போது அங்கு ஓர் இளைஞன் வந்தான் அவரை வேண்டுமென்றே சீண்டிப் பார்த்து உங்கள் இருவரில் யார் உயர்ந்தவர் எனக் கேட்டான். சற்றும் தாமதிக்காமல் "கடவுள் தொண்டனாக நான் இருப்பதால் நானே உயர்ந்தவன்", "உலக சுகங்களில் உனைப் போன்று நான் வாழ்ந்தால் நாயே உயர்ந்தது என்றார்" 13ம் நூற்றாண்டில் இத்தாலி பிளாரன்ஸ் நகரில் மக்கள் உலக இன்பங்களில் மூழ்கி மனம் போன போக்கில் வாழ்ந்தனர். இதனைக் கண்ட ஏழுபேர் மிகவும் மனம் வருந்தினர். இவர்கள் இறைவனிடமும் அன்னை மரியிடமும் மிகுந்த பக்தியும் பற்றும் கொண்டிருந்தனர்.

1233ம் ஆண்டு ஆகஸ்டு 15ல் அன்னையின் பெருவிழாவன்று மரியன்னை காட்சி தந்து இறைப்பணி செய்ய அழைத்தார். இவர்கள் திகைத்து என்ன செய்வது என தெரியாமல் நின்றனர். காரணம் எழுவரில் நால்வருக்கு திருமணம் முடிந்திருந்தது. உடனே நால்வரும் தங்களின் குடும்பத்திற்கு தேவையான அனைத்தையும் செய்து உறுதிப்படுத்தினர். ஒரு குறிப்பிட்ட நாளில் துறவு மேற்கொண்டு நகரின் வெளியே லா கார்சியா எனுமிடத்திற்குச் சென்று இறைப்பற்றில் நிலைத்தனர். இவர்களைப்பற்றி கேள்விப்பட்டு மக்கள் வருவது மிகுந்த இடையூராக இருந்தது. அதனால் எழுவரும் மொந்தே செனாரியோ என்ற பாலைவனப் பகுதிக்குச் சென்று அங்கு ஓர் ஆலயம் எழுப்பி செபத்திலும் தவத்திலும் உறுதியாக இருந்தனர். மீண்டும் மக்களால் அதே இடையூறுகள் தொடர்ந்தன. அவர்களில் சிலர் தாங்களும் துறவு மேற்கொள்ள விரும்பினர். அவர்களுக்கு அறிவுரைகள் கூறி அனுப்பினர். என்ன செய்வது என தவித்தனர். அப்போது அற்றிங்கோ, கங்டிகலியோன் என்கிற இரு ஆயர்கள் பக்கபலமாக இவர்களுக்கு இருந்து ஆதரவு தந்தனர்.

மீண்டும் அன்னையின் காட்சி அருளப்பட்டது. அப்போது வானதூதர் சுருள் ஏட்டோடும் அன்னையின் கரத்தில் கருப்பு நிற உடையும் இருந்தது. "இனி இதுவே உங்கள் உடை. புனித அகுஸ்தீனாரின் ஒழுக்க நெறிகளை கடைபிடித்து வாழுங்கள். எனது ஊழியர்களாக உங்களைத் தேர்ந்து கொண்டேன் எனக் கூறி மறைந்தார். மரியின் ஊழியர் சபை அருட் பணியாளர் மைக்கேல் சுரேஷ் என்பவர் இத்தாலி பதுவாவில் ஓர் ஆலய பணியாளராக இருந்தபோது வத்திக்கான் வானொலியின் பேட்டியில் இவரைப்பற்றி கூறியுள்ளார். இவர்களின் பெயர்களின் விபரம்: புனித பொன்பீலியூஸ், அலெக்சிஸ், அமதியூஸ், ஹக், சொஸ்தேனூஸ், மனேதுஸ், போன் குந்தா போன்றோர்.

இத் திருநாளை கொண்டாடும் நாம் இன்றுள்ள அதிகார ஆடம்பர விளம்பர பிரமாண்டத்தை காண்பிக்கின்ற மோகத்தின் இடையில் எப்படி வாழ வேண்டும் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம். அர்ப்பணிப்பு என்பது முழுமையாக இருக்க வேண்டும் அதில் நிலைத்திருக்கவும் வேண்டும் மற்றொன்று பெருங் கூட்டம் கூடினால் தான் எதையும் சாதிக்க முடியும் என்பதை இப் புனிதர்களின் சான்று வாழ்வு நாம் ஏற்க வேண்டும் ஏழே பேர் சாதித்தது இன்று உலக அளவில் சபைகள் வளர்ந்துள்ளது. சிந்தித்து செயலில் இறங்கி இறையாட்சி மலர இணைந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் இந்த ஏழு புனிதர்கள் வாழ்ந்த சாட்சிய வாழ்வை வாழ்ந்து இறை மக்களை இறைவன் பால் ஈர்த்து புதுயுகம் புத்தாண்டில் மலர வளர உம்மை மன்றாடுகிறோம்

2. பாசத்தால் எம்மை ஈர்க்கும் இறைவா, உலக மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு உமது அன்பு வழியில் பயணிக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உறுதிப்படுத்தும் இறைவா மனம் போன போக்கில் குடும்பம், சமூகம், உலகு இன்ப நாட்டங்களில் மூழ்காமல் இறைப் பற்றில் ஆழமாக வேரூன்றி வாழ உமது இரக்கம் கருணை வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 21.02.2025 புனித பீட்டர் தமியான் திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

ஏழ்மை நிலையில் ரவென்னாவில் வாழ்ந்த பெற்றோருக்கு 1007ம் ஆண்டு பிறந்தவர் பீட்டர். கடவுள் பக்தியும், அறிவும் மிகுந்த பீட்டர் அன்பு செலுத்துவோரின்றி பரிதவித்தார். அந்நேரம் குருவாக இருந்த தமியான் என்ற மற்றொரு அண்ணன் பீட்டர்மீது பரிவுகொண்டு அவரைப் படிக்க அனுப்பினார். இருளிலிருந்த தனக்கு ஒளி ஏற்றிய இந்த அண்ணனின் பெயரையும் தமது பெயருடன் சேர்த்துக் கொண்டார். ரவென்னா பான்சா

மற்றும் பர்மாவில் கல்வி பயின்ற இவர் 25ம் வயதில் சிறந்த பேராசிரியராக பர்மாவில் கண்டறியப்பட்டார். உலக நாட்டங்கள்மேல் வெறுப்படைந்து / பான்தே அவெல்லானாவில் இருந்த துறவிகளிடம் சென்று துறவி ஆகும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். 40 நாட்கள் சிறிய அறையில் இருந்து தியானம் செய்து, பிறகு மீண்டும் அவர்களைச் சந்தித்து துறவியானார். இறைவனின் துணையுடன் திருநூலை தெளிவாகக் கற்றுத் தேர்ந்து தமது துறவிகளுக்கும் மற்ற சபை துறவிகளுக்கும் திருவிவிலியம் சார்ந்த வகுப்புகள் எடுத்தார். சபைத் தலைவராக 1043ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். 1057 நவம்பர் 30ம் தேதி பீட்டர் தமியான் கர்தினால் ஆனார். ஓட்டோ மறைமாவட்டத்தில் இருந்துக்கொண்டு குப்பியோ மறைமாவட்டத்தின் கண்காணிப்பாளராகவும் இருந்தார். அப்போது அனைத்து கர்தினால்களுக்கும் எழுதிய கடிதத்தில் எல்லாரும் தங்கள் முன்மாதிரிகையால் மற்றவர்கள் முன் ஒளிர வேண்டும் எனக் குறிப்பிட்டார். ரவென்னாவிற்கு போகும் வழியில் நோயுற்று 1072ம் ஆண்டு பிப்ரவரி 21ம் தேதி இறைவனடி சேர்ந்தார். 1823ம் ஆண்டு திருத்தந்தை 12ம் சிங்கராயர் தமியானை திருஅவையின் மறைவல்லுநர் என அறிவித்தார். இப்புனிதரின் விழாத் திருப்பலியில் பங்கேற்கும் நாமும் நமது செயல்களினால் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ இறைவனிடம் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட புனித பீட்டர் தமியானைப்போல எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் அனைவரும் தவறுகளையும் கலகங்களையும் எதிர்த்துப் போராடி திருஅவையைக் காத்து வழிநடத்திட அவர்களுக்கு நல்ல ஆற்றலைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் தந்தையே இறைவா, தம் மகன் ஈசாக்கைப் பலிகொடுக்க முயன்ற ஆபிரகாமைப்போல நாங்களும் எங்களது செயல்கள் மூலம் உம்மீதுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்த நல்ல ஆற்றலைத்தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்புத் தந்தையே இறைவா, எம் பங்கு மக்களின் குடும்பங்களில் உள்ள துன்பங்கள், நோய்கள், கவலைகள், கஷ்டங்கள், தாங்கமுடியாத சுமைகளை (பொறுப்புகள், கடமைகள்) இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டு இயேசுவின் பின்னால் செல்ல மனவுறுதியையும், வலிமையையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 22.02.2025 புனித பேதுருவின் தலைமைப்பீடம் திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்று நம் தாய் திருஅவையானது புனித பேதுருவின் தலைமைப் பீடம் நினைவு திருவிழாவைக் கொண்டாட அழைப்பு விடுக்கிறது. இயேசு விவிலியத்தில்

பேதுருவை பார்த்து, "உன் பெயர் பேதுரு, இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிக் கொள்ளா, விண்ணரசின் திறவுகோலை நான் உன்னிடம் தருவேன், மண்ணுலகில் நீ தடை செய்வது எதுவும் விண்ணுலகிலும் தடைச் செய்யப்படும், மண்ணுலகில் நீ அனுமதிப்பது எதுவும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்று பேதுருவிடம் கூறிய இயேசு, தமக்கு பிறகு தமது இடத்தில் பேதுருவைப் பணியாளராக அமர்த்தி உலகம் முழுமைக்குமான அதிகாரத்தை கொடுத்தார். அதனடிப்படையில் தன்னை இறைப்பணிக்காக கையளித்து இறை வார்த்தையை மக்களுக்கு போதித்தது, திருமடல்கள் எழுதி, இயேசுவுக்காக சிலுவை மரணத்தை அதுவும் தன்னை சிலுவையில் தலைகீழாக அறையும்படி வற்புறுத்தி தன்னை தியாகப்பலியாக்கினார்.

இயேசு தாம் செய்த அனைத்து விதமான நற்செய்திகளின் பரிமாணத்தையும் பேதுரு வழியாக மீண்டும் செயல்படுத்தினார். அவரைத் தம் பிரதிநிதியாக மேன்மைப்படுத்தினார். இதனை நினைவுக் கூறவும் திருத்தூதர்கள்மேல் கட்டப்பட்ட திருஅவையானது ஒற்றுமையின் அடையாளமாக திகழவும் பேதுருவின் தலைமைப்பீட விழா கி.பி.354ம் ஆண்டிலிருந்து இவ்விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது. இவரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு குடும்பங்களிலும், பங்குத்தலங்களிலும் தலைமையேற்று பணிசெய்யும் ஆற்றலையும், அருளையும் பெற வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே, உம் திருஅவையின் திருப்பணியாளர்களான, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினருக்கு உறுதுணையாக இருந்து சிதறிப்போகும் கத்தோலிக்க மக்களை உம் பாதையில் வழிநடத்த தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வும் வழியுமான இறைவா, புனித யோவானைப்போல வாழ்ந்து, கிறிஸ்துவின் அன்பை அதிகமாகப் பெற்று நம்பிக்கை வாழ்வில் நிலைத்து நின்று கிறிஸ்துவில் ஆழமான நம்பிக்கைக் கொண்டு எங்கள் வாழ்வை இறைவனில் அர்ப்பணித்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமுள்ள தந்தையே, நாட்டையாளும் தலைவர்கள் மதத்தின் அடிப்படையில் மக்களை வேறுபடுத்தாமல் ஏழ்மை, கல்வி இவைகளை முன்னிலைப்படுத்தி மக்களை ஆட்சிசெய்து, அனைவரையும் அரவணைத்து வாழவும், அவர்களின் தேவைகளை உணர்ந்து செயல்பட வேண்டிய நல்ல ஞானத்தையும் தாராள உள்ளத்தையும் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 23.02.2025 பொதுக்காலம் 7ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

I. 1சாமு. 26: 2,7-9,12-13,22-23 II. 1கொரி. 15: 45-49 லூக். 6: 27-38

இறையேசுவில் நம்பிக்கைக்கொண்ட சகோதர சகோதரிகளே, பொதுக்காலம் 7ம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் இவர் நீதித்தலைவர்களின் வரிசையில் இறுதியாக வந்தவர். இஸ்ரயேலின் முதல் அரசர் சவுல் மற்றும் சிறுவயதிலே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு இஸ்ரயேலின் பேரரசாக உயர்த்தப்பட்ட தாவீது ஆகிய மூவரை மையமாகக் கொண்டு ஏற்பட்ட சமுதாய மாற்றமும் இறையச்சமும் இந்நூலில் இடம் பெறுகிறது. இரண்டாம் வாசகத்தில் கொரிந்து மக்கள் மனிதத் தலைவர்களிடமல்ல, மாறாக கிறிஸ்துவிடம் கொள்ளும் உறவைப் பற்றியே பெருமைப்பாராட்ட வேண்டும் என்கிறார். நற்செய்தயில் கைம்மாறு நாடாத அன்பு தன்னலமற்ற அன்பையும், எதிர்ப்பார்ப்புகளுடன் நாம் பிறரை அன்பு செய்வதையும் சொல்கின்றார். நாம் எவ்வாறு மற்றவர்களிடமிருந்து அன்பு, பொருட்கள், உதவிகள் வேண்டுமென்று எதிர்ப்பார்க்கின்றோமோ, அவ்வாறே தேவையில் இருப்பவர்களுக்கு நாமும் உதவி செய்ய வேண்டும்.

இன்று புனித போலிக்கார்ப் விழாவைக் கொண்டாடுகிறோம். இவர் கி.மு. 69ம் ஆண்டில் பிறந்தார். திருத்தூதர் யோவானின் சீடர், புனித யோவான் இவருக்கு குருப்பட்டமளித்தார். பின் "செமெரினா நகரின் ஆயராக அருட்பொழிவு செய்தார். தவறான கொள்கைகளை எதிர்த்தார். வேத விரோதிகள் இவரைப் பிடித்து உயர்அதிகாரிகள் முன் நிறுத்தினார்கள். என் அரசரை, என் இரட்சகரை நான் சபிக்கமாட்டேன் என்று அதிகாரியை எதிர்த்து பேசினார். இதனால் கோபமுற்ற அதிகாரிகள் இவரை நெருப்பில் தூக்கியெறிந்தனர். ஆனால் நெறுப்பு இவரை ஒன்றும் செய்யவில்லை. இதனால் கோபமுற்றவர்கள் ஈட்டியால் குத்திக் கொன்றனர். இறைவனின்மேல் கொண்ட அளவற்ற அன்பினால் இவர் இறுதிவரை மனந்தளராமல் இறைவனுக்கேற்ற சாட்சிய வாழ்வு வாழ்ந்ததைப்போன்று நாமும் இறைவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து செயல்படவும், இறைவனின் அருளைப் பெற்று அவரில் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை பொறுப்புடனும், பாதுகாப்புடனும் நல்வழியில் நடத்திச் செல்ல, உமதாற்றலைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, உலகிலுள்ள மக்கள் அமைதியாக, ஒற்றுமையாக, சமாதானத்தோடு வாழவும், துன்பங்கள், சவால்களுக்கு மத்தியில் உம்மை முழு நம்பிக்கையோடு பின்பற்றி பயணிக்கவும்,

அவர்களுக்குத் தேவையான மனவலிமையையும், தைரியத்தையும், நம்பிக்கையையும் அளித்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய தந்தையே, தீமைகளின் ஆதிக்கத்தில் இருக்கும் எம்மக்களை உமது தலைமைப்பீட ஒளியில் நிறைத்து நன்மையின் பாதையில் நாங்கள் நடக்க அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 25.02.2025 புனித லூயிஜி வெர்சிலியா, கலிஸ்துஸ் கரவாரியோ திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, புனிதத்தை நோக்கிய பயணத்தில் சலேசிய ஆயர் வெர்சீலியா மற்றும் தந்தை கரவாரியோ, சீன மண்ணில் பூத்த தியாக மலர்கள் ஆவர். தொன் போஸ்கோவின் சீன மறைப்பணி கனவை நினைவாக்கியவர்கள். 1905ல் சீன மறைப்பணிக்காக முதன்முதலாக ஒரு சலேசிய குழு, பணி வெர்சீலியா தலைமையில் சென்றது. சலேசியர்களின் சிறப்பான பணிக்கு சாட்சியாக அங்கு ஒரு மறைமாவட்டம் உயிர்பெற்றது. அதன் முதல் ஆயராக வெர்சீலியா நியமிக்கப்பட்டார். 1922ல் அவரை சந்தித்த சில இளம் துறவற சகோதரர்களில் ஒருவர் சீன மறைப்பணிக்காக தாமும் ஆயருடன் செல்ல விருப்பம் தெரிவித்து 1924ல் மறைப்பணியாளராக சீனா சென்றார். அந்த அருட்சகோதரர் கரவாரியோ ஆவார். 1929ல் ஆயர் வெர்சீலியாவின் திருக்கரங்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சீனா, திருச்சபைக்கு எதிராக கடுமையாக மாறிக்கொண்டிருந்த காலம் அது. குறிப்பாக தந்தை கரவாரியோ பணியாற்றும் லின்ச்சோ மிகவும் கலவரத்திற்குட்பட்ட பகுதி. 1930 பிப்ரவரி 24ல் தந்தை கரவாரியோ, 2 இளம் வேதியர்கள், 3 இளம் பெண்கள் ஆகியோர் அடங்கிய குழுவுடன் ஆயர் வெர்சீலியா, லின்ச்சோ சென்றார். அப்பயணத்தின்போது வழிக்கொள்ளையர் கூட்டம் அவர்களை முற்றுகையிட்டது. அக்கொள்ளையர்களின் தீயக் கண்கள் குழவில் இருந்த இளம் பெண்கள் மீது விழ, அவர்களையும் மற்றவர்களையும் காப்பாற்ற துணிச்சலாக நின்ற ஆயரும், தந்தை கரவாரியோவும் சுட்டுக்கொள்ளப்பட்டனர். 2000ல் திருச்சபை இவர்களை புனிதநிலைக்கு உயர்த்தியது. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அழைப்பை நாம் முழுவதுமாக உணர்ந்து வாழ வேண்டி இத்திருப்பலியின் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, திருஅவையின் தலைவர்களாக வாழும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களின் அழைப்பினை ஏற்று, வாழ்வில் ஏற்படும் சோதனைகளை உமது வல்லமையால் முறியத்து வெற்றிக்கொள்ளும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. புனிதர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை எமது வாழ்வில் உணர்ந்து, எல்லோரையும் ஒன்றிணைத்து எல்லோருக்கும் அடிப்படையாக அமையும் சலேசிய ஆன்மீகத்தை எமக்கு வாழ்வாக்கிய

புனிதர்கள் வெர்சீலியா மற்றும் கரவாரியோ முன்மாதிரியில் பல இளையோரை இறை அழைத்தலில் நிலைபெற செய்ய வேண்டிய அருளைதந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. தீயை மூட்டவே வந்தேன். அது இப்போதே பற்றி எரிய விரும்புகிறேன் என்றவரே, மனித நேயத் தீ எம்மில் பற்றி எரியவும் சமத்துவம் சகோதரத்துவம் மலரவும், அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புனித லூர்து அன்னை தரும் செய்திகள்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, நமது கத்தோலிக்கத் திருச்சபை பிப்ரவரி 11ந்தேதி தூய லூர்து அன்னையின் விழாவைச் சிறப்பித்து மகிழ்கின்றது. தூய கன்னி மரியா லூர்து நகரில் அளித்த காட்சிகளை நினைவுகூரும் விதமாக இவ்விழா கொண்டாடப்படுகிறது. 1854 டிசம்பர் 8ந்தேதி, "கன்னிமரியா தாம் உற்பவித்த நொடியில் இருந்தே, வல்லமைமிகு இறைவனின் அருளாலும் சிறப்புச் சலுகையாலும், மனிதகுல மீட்பரான இயேசுவின் பேறுபலன்களாலும் தொடக்கப் பாவத்தின் கறைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டார்" என்ற அமல உற்பவ நம்பிக்கையை, திருஅவையின் நம்பிக்கைக் கோட்பாடாக திருத்தந்தை 9ம் பத்திநாதர் அறிக்கையிட்டார்.

திருஅவையின் நம்பிக்கை உண்மையானது என்பதை உறுதி செய்ய விரும்பிய இறைவனின் மாசற்ற கன்னித் தாயான மரியா, பிரான்சு நாட்டின் லூர்து நகரில் பெர்னதெத் சூபிரூஸ் என்ற 14 வயது சிறுமிக்குக் காட்சி அளித்தார். 1858 பிப்ரவரி 11ந்தேதி தனது சகோதரி மற்றும் தோழியுடன் விறகு சேகரிக்கச் சென்ற பெர்னதெத், மசபியேல் குகை அருகே சென்ற வேளையில் மரியன்னையின் முதல் காட்சியைக் கண்டார். மசபியேல் குகையில் ஓர் இளம் பெண்ணாகத் தோன்றிய கன்னி மரியா, வெண்ணிற ஆடையும் முக்காடும் அணிந்திருந்தார். அவரது இடையில் நீல நிறத்தில் ஒரு கச்சை காணப்பட்டது. அவரது கையில் முத்துகளால் ஆன ஒரு செபமாலை இருந்தது. அவரது காலடியில் மஞ்சள் வண்ணத்தில் காட்டு ரோஜாக்கள் மலர்ந்திருந்தன. அவர் கைகள் விண்ணகத்தை நோக்கி கூப்பியவாறு இருந்தன.

பெர்னதெத் தன்னோடு வந்திருந்த இருவரிடமும், "அதோ பாருங்கள், மிகவும் அழகான ஓர் இளம்பெண்" என்று கூறினார். அவர்கள் இருவரது கண்களுக்கும் மரியன்னையின் காட்சி புலப்படவில்லை. மீண்டும் பிப்ரவரி 14ந்தேி, அன்னையின் காட்சியை பெர்னதெத் கண்டார். மூன்றாம் முறையாக 18ந்தேதி காட்சியளித்த மரியன்னை, மசபியேல் குகைக்கு பெர்னதெத் இரண்டு வாரங்கள் தொடர்ந்து வர வேண்டும்

என்று பணித்தார். மரியன்னையின் வார்த்தைகளை ஏற்று, பெர்னதெத்தும் நாள்தோறும் அங்குச் சென்றார். செபமாலையின் மகிழ்ச்சி, துயரம், மகிமை சார்ந்த 15 மறையுண்மைகளையும், பெர்னதெத் தியானித்து செபிக்க அன்னை வழிகாட்டினார். பிப்ரவரி 18ந்தேதி, மரியாவைக் கண்டு பெர்னதெத் பரவச நிலையில் இருந்ததை அவரோடு சென்றவர்கள் கண்டனர். பாவிகள் மனந்திரும்ப செபிக்குமாறும், தனக்காக அவ்விடத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட வேண்டும் என்றும் மரியன்னை வேண்டுகோள் விடுத்தார். பெர்னதெத் அதை பங்குத்தந்தை பெரமாலிடம் கூறியபோது, ஆலயம் கட்டுவதற்கான காரணத்தை அறிந்துவரக் கூறினார்.

பிப்ரவரி 25ந்தேதி காட்சியின்போது, மரியன்னையின் கட்டளையை ஏற்று பெர்னதெத் மண்ணைத் தோண்டியபோது, அந்த இடத்தில் அற்புத நீரூற்று ஒன்று தோன்றியது. அதன் நீரைப் பருகியவர்களும் தங்கள்மீது தெளித்தவர்களும், உடல் உள்ள நோய்களிலிருந்து அதிசயமாக நலம் அடைந்தனர். பெர்னதெத் கண்ட காட்சிகள் மற்றும் அற்புத நீரூற்று குறித்து பரவிய செய்திகள் மக்கள் பலரை மசபியேல் குகைக்கு ஈர்த்தன. அவர்கள் அனைவரும் பெர்னதெத்துடன் சேர்ந்து அவ்விடத்தில் செபமாலை செபித்து வந்தார்கள். மார்ச் 25ந்தேதி கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழா நாளில் மரியன்னை காட்சியளித்த வேளையில், அவரது பெயர் என்னவென்று பெர்னதெத் கேட்டார். அதற்கு அன்னை, "நாமே அமல உற்பவம்" என்று பதில்மொழி கொடுத்தார். அதை மனதில் இருத்தி திரும்பத்திரும்ப உச்சரித்தவாறே, பெர்னதெத் பங்குத் தந்தையிடம் போய் கூறினார்.

பெர்னதெத் மக்களை ஏமாற்றி வருவதாகக் கருதி, அரசு மற்றும் திருஅவையின் அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தினர். ஏப்ரல் 7ந்தேதி லூர்து அன்னையின் 16வது காட்சியின்போது, மருத்துவ ஆய்வுக்காக பெர்னதெத்தின் கையை சிலர் 15 நிமிடங்கள் நெருப்பினால் சுட்டனர். பரவச நிலையில் இருந்த பெர்னதெத் அதை உணரவும் இல்லை, அவரது கையில் தீக்காயம் ஏற்படவும் இல்லை. 1858 ஜூலை 16ந்தேதி மசபியேல் குகையில் மரியன்னையின் இறுதிக் காட்சியைக் கண்ட பெர்னதெத், "இதற்கு முன்பு நான் அவரை இத்தகையப் பேரழகோடு கண்டதே இல்லை" என்று கூறினார். அன்னையின் காட்சிகள் நிறைவுற்றாலும், அவர் காட்சியளித்த இடத்தில் தொடர்ந்து அற்புதங்களும் அதிசயங்களும் நிகழ்ந்து கொண்டிருந்தன. பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட மக்கள் அற்புத நீரூற்றின் தண்ணீரால் நலமடைந்தனர்.

லூர்து நகர் காட்சிகளின் உண்மைத்தன்மைக் குறித்து ஆய்வு செய்ய, 1858 நவம்பர் 17ந்தேதி விசாரணைக் குழு ஒன்றை திருஅவை அமைத்தது. இறுதியாக 1862 ஜனவரி 18ந்தேதி, டர்பெஸ் மறைமாவட்ட ஆயர் லாரன்ஸ், "பெர்னதெத் சூபிரூசுக்கு கன்னிமரியா காட்சி அளித்ததில், இயற்கைக்கு மேற்பட்ட இறைவனின் செயல்பாடுகள் நிகழ்ந்துள்ளது உண்மையே" என்று அறிவித்தார். இதையடுத்து

மரியன்னை காட்சியளித்த மசபியேல் குகை அருகே, அவரது பெயரில் பேராலயம் ஒன்று கட்டி எழுப்பப்பட்டது. திருத்தந்தை 9ம் பயஸ், திருஅவை முழுவதும் லூர்து அன்னைக்கு வணக்கம் செலுத்த அனுமதி வழங்கினார். இதன் விளைவாக, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் லூர்து நகரை நோக்கி திருப்பயணிகள் வருகைப் புரிகின்றனர். லூர்து நகர் காட்சியின் நினைவாக உலகெங்கும் கத்தோலிக்க ஆலய வளாகங்கள் பலவற்றிலும் குகை போன்ற காட்சிப்பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இது லூர்து மாதா கெபி என்று அழைக்கப்படுகின்றது.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் லூர்து அன்னையின் பெயரில் ஆலயங்கள் அமைந்துள்ளன. அவற்றில், பூண்டி (லூர்து) மாதா பேராலயம், வில்லியனூர் (லூர்து) மாதா திருத்தலம், பெரம்பூர் லூர்து அன்னை திருத்தலம் ஆகியவை மக்களிடையே நன்கு அறிமுகமானவை. லூர்து நகர் பேராலயத்தின் கட்டடப் பாணியில் சென்னை பெரம்பூர் லூர்து அன்னை திருத்தலம் கட்டப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும். இங்கு பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்களும் அன்னையின் அற்புதங்களை அனுபவித்து மகிழ்கின்றனர். கிறிஸ்தவத்தின் வரலாற்றில் மரியன்னையின் காட்சிகள் முதல் நூற்றாண்டு முதலே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் உலகப் புகழ்பெற்ற காட்சிகளுள் ஒன்றாக லூர்து நகர் காட்சி அமைந்துள்ளது. மனமாற்றத்தின் வழியாகவே கடவுளின் அருளை மக்கள் நிறைவாகப் பெற முடியும் என்பதே லூர்து காட்சியில் அன்னை நமக்கு வெளிப்படுத்திய செய்தி. அமல உற்பவியான மாசற்ற கன்னி மரியாவின் புகழ் பாடுகின்ற நாம், அவர் விரும்புகின்ற விதத்தில் மனமாற்றம் பெற்று இயேசுவின் இதயத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுப்போம்.

## அருளாளர் யூசேபியா பாலோமினோ ஏனெஸ் வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

**சாலமான்கா ஊரில் ஒரு சிறுமலர்:** ஸ்பெயின் நாட்டில் சாலமான்கா மாநிலத்தில் கேண்டல்பினோ என்ற சிறு கிராமத்தில் 1899ல் டிசம்பர் 15ம் நாள் யூசேபியா பாலோமினா ஏனெஸ் பிறந்தார். இவரது தந்தை அகுஸ்தீன் பாலோமினோ கடவுள் பக்தி மிகுந்தவர். ஏழ்மையில் குடும்பம் சென்று கொண்டிருப்பினும், தனது தளரா நம்பிக்கையை விட்டதில்லை. காலத்தின் கோலத்தால் சில சூழல்களில் தனது தந்தையோடு சேர்ந்து யூசேபியாவும் அருகிலுள்ள கிராமங்களுக்கு சென்று பிச்சையெடுக்கும் அளவிற்கு வாழ்வில் ஏழ்மை அவர்களை ஆட்கொண்டிருந்தது. ஆனால் அதற்காக அவர்கள் மனம் உடைந்துபோனதில்லை, மகிழ்ச்சியாக ஒரே நம்பிக்கையோடு இருவரும் அந்த சூழலை ஏற்று வாழ்ந்தார்கள்.

**தந்தையிடமிருந்து கற்றுக்கொண்டது:** அந்த தூர பயணங்கள் வழியே தனது தந்தை அவருக்கு இறை ஞானத்தையும், நம்பிக்கையையும் எடுத்துச் சொல்லுவார். யூசேபியாவும் இறைவனுடைய அன்பையும்

மறையுண்மைகளையும் பற்றி தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். தனது குடும்பத்திற்காக உழைத்தார், செபித்தார் அதுமட்டுமல்ல தனது குடும்பத்தாரால் அன்பு செய்யப்பட்டார் யூசேபியா. தனது பெற்றோரின் அனுமதியோடு தனது விருப்பப்படி இயேசுவை நற்கருணையின் வழியாக முதன் முதலில் தனது உள்ளத்தில் ஏற்றுக்கொண்டார். காலம் நகர்ந்தது இளவயதில், ஒரு பணக்கார குடும்பத்தில் பணிப்பெண்ணாக வேலைக்கு சென்றாள் யூசேபியா. இருப்பினும் அந்த இளம் வளர் பருவத்தில், இயேசுவுக்கே முதலிடம் கொடுத்து நெருக்கமான நட்பினை வளர்த்துக்கொண்டாள்.

**அருட்சகோதரிகளோடு சமையலறையில் பணி:** முன்னதாக சாலமான்காவிற்கு சிறுவர் சிறுமியரை கவனித்துக்கொள்ளும் பணிக்கு சென்றவர், பிறகு தங்கும் விடுதியில் உதவியாளராக பணிபுரிந்தார். யூசேபியாவிற்கு ஒரு குறிக்கோள் இருந்தது. அதாவது தானும் ஒரு அருட்சகோதரியாக வேண்டும் என்பது. சில நாட்களுக்குள் ஒரு தோழி யூசேபியாவை சலேசிய அருட்சகோதரிகள் நடத்திவரும் ஆரட்டரிக்கு கொண்டு சேர்க்கிறாள். அங்கு அருட்சகோதரிகள் யூசேபியாவை தங்களுக்கு உதவியாக இங்கே தங்கிக்கொள்ளுமாறு கூறினர். அன்று முதல் சமையலறையே இவருக்கு கல்விக் கூடமாக அமைந்தது, மற்ற சகோதரிகளும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சமையலறைக்கு வந்து கள்ளமறியா இளம் சமையல் காரியான யூசேபியாவின் கனிவான அமுத மொழியில் நனைந்துவிட்டு செல்வது வழக்கமானது.

**நிறைவேறியது கனவு:** தனது ஒரே கனவான அருட்சகோதரியாக வேண்டும் என்பதை ஒருநாளும் அவர் மறந்ததில்லை. போதிய கல்வி இல்லாதது, ஏழ்மையான குடும்ப நிலை இவையெல்லாம் யூசேபியாவை எந்த விதத்திலும் தடுக்கவில்லை. சாலமான்காவிற்கு வருகைதந்த சபையின் அகில உலக முதன்மை அன்னை யூசேபியாவின் விருப்பத்தை ஏற்று அவரை பார்சிலோனாவில் நவசன்னியாச மடத்திற்கு அனுமதித்தார். அங்கு தனது சக சகோதரிகளுக்கு தாழ்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் ஆன்மீகத்தில் அவர்களை வழிநடத்தினார். 1924ல் சலேசிய அருட் சகோதரியானார். பிறகு வல்வேர்தெ தெல் கெமினோ என்ற இடத்திற்கு சமையலுக்கும் இல்ல பராமரிப்பு உதவியாளராகவும் பணியாற்ற அனுப்பப்பட்டார். தொன் போஸ்கோவின் தனிவரத்திற்கேற்ப இவரும் சாதாரண பணிகளையும் அசாதாரண முறையில் சிறப்பாக செய்தார், கடவுளும் அவருக்கு நிறைவான அருட்கொடைகளை பரிசாக தந்தருளினார்.

**தன் ஆன்மீகத்தால் வியப்பில் ஆழ்த்தியவர்:** இளம் பருவ பெண்கள் யூசேபியாவின் ஆன்மீகத்தால் பெரிதும் வியப்படைந்து, அவரின் வழிகாட்டுதலுக்காக ஏங்கினார்கள். அதனால் ஆரட்டரியில் அவர் பணியாற்ற நேர்ந்தது. இவர் பெற்றுள்ள தூய ஆவியாரின் அபரி விதமான உந்துதலில், செபத்தில் மற்றும் ஆழமான நம்பிக்கையில் கொண்ட ஊக்கத்தினால், குருமட மாணவர்கள், பெரியவர்கள், குருக்கள்

உட்பட யூசேபியாவின் ஆலோசனைகளை நாடினார்கள். இயேசுவின் தூய காயங்களின் பக்தியை பரப்பி வந்தார்.

**ஒரு தீர்க்க தரிசியாக:** தொன் போஸ்கோவை போன்றே யூசேபியாவும் கடவுளிடமிருந்து தீர்க்கதரிசன அருட்கொடையினை பெற்றவர். ஸ்பெயின் உள்நாட்டு போரை முன் கூட்டியே தீர்க்கதரிசனமாய் சொன்னவர், அதற்காக மறைசாட்சியாகவும் மாற ஆசைப்பட்டார். அச்சமயம் முதல் தன் உடல்நலத்தில் தொடர்ந்து சரிவுகளை கண்டார். மறைசாட்சியும் அருளாளருமான அருட்சகோதரி கார்மென் மொரேனோ இவரது இல்ல இயக்குநராக பணியாற்றியவரின் பராமரிப்பில் இருந்து வந்தார். தனது மறைசாட்சிய வாழ்வை முன்னறிவித்தவர் யூசேபியா. பல்வேறு திருக்காட்சிகள் இவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. 1933 பிப்ரவரி 10ம் நாள் மறைந்தார். திருத்தந்தை 2ம் யோவான் பவுல் 2004 ஏப்ரல் 25ம் நாள் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

**அழைத்தலின் மேன்மை:** ஒரு சாதாரண பெண், இரண்டு வருடங்களுக்கு மேல் பள்ளிப்படிப்பை பாதியில் விட்டவள், சிறுவர் சிறுமியரை கவனித்துக்கொண்டும் வீட்டு பணிப்பெண்ணாக வேலை செய்தவள் என்றும், அதே நிலையில் அவளை வைக்காமல், தங்களோடு ஒரு சக கன்னியராக வரவேற்று உருவாக்கிய அந்த சலேசிய அருட்சகோதரிகளின் உன்னதமான உயர்ந்த உள்ளத்திற்கு நாம் தலைவணங்க கடமைப்பட்டவர்கள் ஆகிறோம். இன்றைக்கு நமது அக்கம் பக்கத்திலும் நிறுவனங்களிலும், பெரிய பெரிய முதலாளிகளின் இல்லங்களிலும் இவரைப் போல எத்தனையோ இளம் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாய் வேலை செய்கிறார்கள். இவர்களின் தியாகத்தினால் பல குடும்பங்கள் பிழைத்துக் கொண்டு வருகிறதை நாம் பார்க்கலாம். இவர்களில் எத்தனை யூசேபியாக்கள் இருக்கிறார்களோ நமக்கு தெரியாது. ஆனால் இவரது வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்தவர்கள் நடுவில் இத்தகையோர் இருப்பார்களேயானால், நிச்சயம் இன்னும் பல புனிதர்களை நாம் காணலாம்.

## தவக்காலத்தில் நாம் என்ன செய்யப்போகிறோம்?

திரு. விக்டர்

யூபிலி ஆண்டு 2025 "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்ற தலைப்பில் திருத்தந்தை இளைஞர்களை மையப்படுத்தியுள்ளார். இந்த நிகழ்வானது துவங்கபட்டுள்ளது. வழிபாட்டின் பொதுக்காலமும் துவங்கி விட்டது. இன்னும் சிறிது நாட்களில் "தவக்காலமும்" துவங்கிவிடும். தவக்காலத்தில் மக்கள் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு காட்டுவதை நாம் வருடந்தோறும் பார்த்து வருகிறோம். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை, சிறப்பு வழிபாடுகள், தியானங்கள், பாவ மன்னிப்பு வழிபாடுகள் என்று ஏராளமாக செய்து வருகிறோம். நமது "தீபகம்" கூட ஒலி ஒளி காட்சி சிலுவைப் பாதையை பல்வேறு பங்குகளில்

நடத்தி வருகிறது. ஒரு சிலர் தவக்காலம் முழுவதும் அசைவ உணவு உண்ணாமல், சைவ உணவை உண்ணும் பழக்கத்தை கடைப்பிடித்து வருகின்றனர். பெண்கள் பெரும்பாலும் இந்நாட்களில் தலையில் "பூ, பொட்டு" வைத்துக் கொள்வதில்லை, ஆண்கள் பலரும் இந்நாட்களில் மது அருந்துவதை தவிர்த்து வாழ்கின்றனர். பல்வேறு ஆலங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்வது ஞாயிறு மட்டும் திருப்பலிக்கு வந்தவர்களில் பலர் தினந்தோறும் திருப்பலிக்கு சென்று வருவதும் இக்காலத்தில்தான். இத்தவக்காலங்களில் மக்கள் எடுக்கும் தவமுயற்சிகளும் ஆலய பங்குத் தந்தையர், ஏற்பாடு செய்யும் ஆன்மீக நிகழ்ச்சிகளும் சிறப்பானவையே. ஆனால் இவைகளால் நமது மனம் எவ்வளவாய் மாறியுள்ளது? தமது இரக்கத்தினால் நமது பாவங்களிலிருந்து நம்மை மீட்கும்படி வந்த இறைமகன் இயேசுவின் "மீட்பை" நாம் பெற்றுக்கொண்டுள்ளோமா? (1தீத்து 3:5) அப்படி மீட்பை அடைந்திருப்பது உண்மையென்றால் நமது வாழ்வில் அதற்கான அடையாளங்கள் என்ன? இதுதான் இவ்வாண்டு நம்முன் நிற்கும் கேள்வி.

**மீட்பு என்றால் என்ன?**

இன்று நம் கத்தோலிக்கரைப் பார்த்து பிற சபையினர் ஏளனமாக கேட்கும் கேள்வி, "நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா?" "நீங்கள் மீட்கப்பட்டு விட்டீர்களா?" என்பதுதான். இப்படி கேள்வி கேட்கும் அநேகருக்கு இதன் உண்மை விளக்கம் தெரியாது என்பதுதான் விசித்திரம்.

**மீட்பு என்பது மூன்று அனுபவங்களைக் கொண்டது.**

**முதல் அனுபவம்:** இந்த உலகில் வாழும் நாம் யாவரும் கடவுளின் பார்வையில் பாவிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். திருத்தூதர் பவுல் இயேசுவினால் நேரடியாக தெரிந்துக்கொள்ளப்பட்டவர். அநேக திருப்பயணங்கள் மேற்கொண்டு "ஆசியா" எங்கும் பல திருச்சபைகளை உருவாக்கியவர். பல அதிசயங்கள் செய்தவர், மரித்தவரையும் உயிரோடு எழுப்பினவர். திருவிவிலியத்தில் அதிகமான (13) புத்தகங்களை எழுதியவர் இவர்தான். இறை இயேசுவுக்காக இரத்த சாட்சியாக தன் இன்னுயிரை ஈந்தவர். அவர் கூறுகிறார், "பாவிகளில் முதன்மையான பாவி நான்தான்" (1திமோ 1:15) என்று. அப்படியானால் நாம் எம்மாத்திரம். எனவே நாம் பாவிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இரண்டாவது அனுபவம்:** பாவிகளாகிய நம்முடைய பாவங்களை சுமந்து நம்மை மன்னித்து அவர் நம்மை மீட்கிறார் என்பதை நம்ப வேண்டும். (எசா 53: 5), (1யோவா 1:7) இது இரண்டாவது அனுபவம்.

**மூன்றாவது அனுபவம்:** இந்த இயேசு கிறிஸ்துவிடம் நமது பாவங்களை அறிக்கையிட்டு அவர் நம்மை மன்னித்துவிட்டார் என்கிற நிச்சயத்தை உள்ளத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் (1யோவா 1:9) இந்த

மூன்று அனுபவங்களும் இணைந்ததுதான் "மீட்பு" அல்லது "இரட்சிப்பு" அல்லது யோவா 3:3ல் இயேசு கூறும் "மறுபடி பிறத்தல்" ஆகும். இதைப்பெற்றால்தான் விண்ணுலகைக் காணமுடியும். இந்த "மீட்பை" நாம் பெற்றுக் கொண்டுள்ளோமா? இல்லையா? என்பதை எப்படி அறிந்து கொள்வது? இதற்கு ஐந்து அடையாளங்கள் உள்ளன.

**முதல் அடையாளம்:** இந்த மீட்பு ஒருவருக்குத் தருவது "மிகுந்த மகிழ்ச்சி" ஆங்கிலத்தில் 'Great Joy" என்று சொல்லுவார்கள். (பிலி.4:4) ஒருவரது வாழ்வில் வருத்தங்கள், கவலைகள், கண்ணீர், வேதனை, ஏமாற்றம் போன்ற பலவிதமான பிரச்சனைகள் இருக்கலாம். ஆனால் இவை அனைத்தின் மத்தியிலும் ஒருவர் "மிகுந்த மகிழ்ச்சியோடு" இருக்கிறார் என்றால் அவர்தான் நம் மீட்பர் இயேசு கிறிஸ்து. அவர் "மீட்பை" பெற்றுள்ளார் என்று சொல்லலாம். இந்த "மிகுந்த மகிழ்ச்சி" நமது உள்ளத்திலும், இல்லங்களிலும் இருக்க வேண்டும்.

**இரண்டாவது அடையாளம்:** இறைமகன் இயேசு விரும்புகிற செயல்களை மட்டுமே செய்வோம். அதை எப்படி அறிந்துக் கொள்வது? அதற்கு ஒரே வழி இறைவார்த்தையைப் படிப்பதுதான். இறைவார்த்தையைப் புறக்கணிக்கிறவன் வாழ்வடைய மாட்டான் என்றும் (நீதி 13:13) அப்படிப்பட்டவனுடைய செபத்தை வெறுக்கிறேன் (நீதி 28:9) என்றும் ஆண்டவர் கூறியுள்ளார். ஆண்டவரை அறிகிற அறிவுதான் நீடித்த வாழ்வு அல்லது நித்திய வாழ்வு (யோவா 17:3) இந்த அறிவுதான் அவர் விரும்புகிற செயல்களைச் செய்ய நம்மைத் தூண்டும். எனவே தினந்தோறும் இறை வார்த்தைகளைப்படித்து அவரது விருப்பத்தை அறிந்து செயல்படுகிற மக்களாய் மாறுவோம்.

**மூன்றாவது அடையாளம்:** இது இரண்டாவது அடையாளத்திற்கு நேர் எதிரானது. ஆண்டவர் விரும்பாததைச் செய்யாமல் இருப்பது. கடவுளின் "வார்த்தை" என்கிற வித்து நமக்குள் இருப்பதால் அது நம்மை எச்சரித்து கடவுளுக்குப் பிரியமில்லாததை செய்யவிடாமல் நம்மை தடுத்து விடுகிறது.

**நான்காவது அடையாளம்:** மீட்கப்பட்டவர் தம் அயலாரோடும் மற்றவரோடும் நல்ல சகோதர உறவில் நிலைத்திருப்பர். உன்னை அன்பு செய்வதுபோல உன் அயலாரையும் அன்பு செய் (மத் 22: 39) என்று இறைமகன் இயேசு நமக்குக் கட்டளையிட்டுள்ளார். கண்ணில் காண்கின்ற சகோதரனை அன்பு செய்யாமல் கண்ணால் காணாத கடவுளை அன்பு செய்கிறேன் என்று சொல்லுகிறவன் பொய் சொல்லுகிறான் (1யோவா 4:20) என்று தூய யோவான் கூறியுள்ளார். நமது உறவுகளை சோதித்து அறிவோம். உங்கள் விண்ணகத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள் (லூக் 6:36).

**ஐந்தாவது அடையாளம்:** மீட்கப்பட்டவன் ஆண்டவருக்கென்று பணி செய்வான், இறை ஊழியம் செய்வான். எனவே அன்பர்களே, இந்த 2025ம் ஆண்டு "ஜீபிலி ஆண்டு நம்பிக்கையின் திருப்பயணிகளாக" நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இறைமகன் இயேசு கொண்டு வந்த "மீட்பை" புதுப்பித்துக் கொள்வோம். மீட்பின் ஐந்து அடையாளங்களும் நம்மில் இருக்கும்படி பார்த்துக் கொள்வோம். அவை இந்த தவநாட்களில் மட்டுமில்லாது ஆண்டு முழுவதும் இருக்கும்படி அமைத்துக் கொள்வோம். இறைமகன் இயேசுவின் இறை இரக்கம் என்றும் நம்மோடு இருப்பதாக. ஆமென்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### உடைந்த உள்ளங்களில் நம்பிக்கை எனும் ஒளியேற்றுவோம்!

புறந்தள்ளப்பட்ட, ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்டவர்கள் சமூகத்தில் மிகவும் தேவையான மாற்றத்தின் முதல்வர்களாக இருக்கக்கூடிய ஓர் உலகத்தை நான் கனவு காண்கிறேன் என்றும், அதனால் நாம் அனைவரும் சகோதரர் சகோதரிகளாக ஒன்றிணைந்து வாழ முடியும் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். ஜனவரி 22, புதன்கிழமை திருப்பீடத்தில் Conrad Hilton நிறுவன குழுமத்தினருக்கு வழங்கிய உரையொன்றில் இவ்வாறு கூறிய திருத்தந்தை, நல்ல சமாரியரின் வழியில் அவர்கள் ஆற்றிவரும் அர்ப்பணம் நிறைந்த பணிகளுக்காக மனமுவந்து அவர்களைப் பாராட்டினார். தாராள மனப்பான்மையும் அர்ப்பணிப்பும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் வாழ்கிறோம் என்பதை உணரும் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு மாற்றும் என்பதை உங்கள் நிறுவனம் எடுத்துக்காட்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, கல்வி, உடல்நலம், புலம்பெயர்ந்தோர் உதவி, வறுமைக்கு எதிரான போராட்டம் ஆகிய துறைகளில் நீங்கள் இலவசமாக வழங்கும் சேவைகள் அன்பு மற்றும் இரக்கத்தின் உறுதியான சான்றுகளாகும் என்றும் கோடிட்டுக் காட்டினார்.

### இறைவார்த்தை ஞாயிறு திருப்பலிக்குத் தலைமையேற்கும் திருத்தந்தை!

ஜனவரி 21, இச்செவ்வாயன்று வெளியிட்ட அதன் அறிக்கையில் இத்தகவலை வழங்கியுள்ள வேளை, திருப்பாடலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள "உமது வாக்கில் நான் நம்பிக்கை வைக்கின்றேன்" (திபா 119:114) என்பது இந்த ஜனவரி 26 இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்டத்திற்கான மையக்கருத்தாக எடுக்கப்பட்டுள்ளதாகவும் உரைக்கின்றது. இறைவார்த்தை ஞாயிறு கடந்த 2019-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 30- ஆம் தேதியன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நிறுவப்பட்டது என்றும், இவ்விழா திருவிவிலியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மியான்மாரில் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் : ASEAN**

மியான்மாரில் கடந்த மூன்று ஆண்டுகளாக நிகழ்ந்துவரும் உள்நாட்டுப் போர் தோல்வியுற்ற நிலையில் அங்குப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அந்நாட்டு இராணுவத்திடம் வலியுறுத்தியுள்ளது ASEAN எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு. மலேசியாவின் இலங்காவியில் (Langkawi) நடந்த உச்சிமாநாட்டின்போது, இவ்வாறு வலியுறுத்தியுள்ள அவ்வமைப்பு, இவ்வாண்டின் இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள தேர்தல்களைக் காட்டிலும், அங்கு வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதுதான் மிகவும் முக்கியமானது என்றும் குறிப்பிட்டுள்ளது. மியான்மாரின் இராணுவ ஆட்சிக்குழுவின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ள மலேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் முகமத் ஹசன் அவர்கள், நடைபெறவிருக்கும் தேர்தல் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். ASEAN அமைப்பின் முந்தைய அமைதிக்கான முயற்சிகள் தோல்வியடைந்தன என்றும், தற்போது முக்கிய எதிர்ப்புக் குழுக்களைத் தவிர்த்து, இராணுவ ஆட்சிக்குழுவுடன் நேரடி பேச்சுவார்த்தைகளில் ஈடுப்பட்டு வருவது அங்கு மேலும் பதட்டங்களை அதிகரித்து வருகின்றன என்றும் இவ்வுச்சி மாநாட்டில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**கடவுளின் உண்மையான புனித மக்கள் நாமே - திருத்தந்தை பிரான்சிஸ்**

பல்வேறு பின்னணிகள் மற்றும் கலாச்சார இணைப்புக்கள் கடவுளின் உண்மையுள்ள புனித மக்களின் ஒற்றுமையையும், கடவுள் முகத்தின் பன்முகத்தன்மையையும் பிரதிபலிக்கிறது என்றும், கடவுளின் உண்மையான புனித மக்கள் நாம் தான் என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் நம்பிக்கை, எதிர்நோக்கு, தொண்டு வாழ்க்கையோடு பொருந்தவில்லை என்றால், கிறிஸ்தவ வழிபாட்டு முறை இல்லை என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், தேவையில் இருக்கும் மக்களுக்கு சிறிய, மதிப்புமிக்க பணியினை ஆற்றுவதன் வழியாக அவர்களது வாழ்க்கைச் சுமையினை நாம் குறைக்க உதவலாம் என்றும் கூறினார். தானம் செய்வது எவ்வளவு முக்கியமோ அதைவிட மேலாக அந்த ஏழைகளின் முகத்தில் இயேசுவைக் காண்பது மிக முக்கியம் என்றும், அவரது கைகளைத் தொட்டு கண்களைப் பார்த்து உதவியளிப்பதன் வழியாக இயேசுவுடன் நாம் உறவு கொள்கின்றோம், அவரோடு கொண்டுள்ள உறவைப் புதுப்பிக்கின்றோம் என்றும் கூறினார் திருத்தந்தை.

**அமைதிக்காகப் பணியாற்றிய இணைப்பாளர்களின் பணி சிறந்தது**

திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளை செபஉரையின் இறுதியில் எடுத்துரைத்த செப விண்ணப்பங்களின்போது இவ்வாறு

கூறிய திருத்தந்தை பிரான்சிஸ். இஸ்ரயேல் மக்கள் பாலஸ்தீனியர்கள் இருவருக்குமிடையே எதிர்நோக்கின் உறுதியான அடையாளங்கள் தேவை என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், இரு நாடுகளின் அரசுத்தலைவர்கள் பன்னாட்டுத் தலைவர்களின் உதவியுடன், சரியான தீர்வுகளை அடைய முடியும் என்று தான் நம்புவதாகவும் எடுத்துரைத்தார். உரையாடல், இணக்கம், மற்றும் அமைதிக்கு ஆம் என்று கூறுபவர்களாக நாம் அனைவரும் இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், மக்கள் நடுவில் உரையாடலும் இணக்கமும் அமைதியும் பெருகவும் நிலைத்து நிற்கவும் செபிப்போம் என்றும் கூறினார்.

### 6. ஒரே குடும்பத்தைச் சார்ந்த கிறிஸ்தவர்களாக மாற...

எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! என்ற இறைவார்த்தைக்கேற்ப இவ்வாண்டும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து வாழ கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தில் அழைக்கப்படுகின்றோம் என்று குறுஞ்செய்தி ஒன்றினை தனது டுவிட்டர் வலைத்தளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒரே குடும்பத்தை சார்ந்த கிறிஸ்தவர்களாக மாற வாழ கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், அனைவரும் ஒன்றாக இருப்பார்களாக என்ற யோவான் நற்செய்தியின் இறைவார்த்தைக்கேற்ப வாழ நாம் செபிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள், கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது விருப்பத்தேர்வல்ல என்றும் அதில் சுட்டிக்காட்டியுள்ளார். யோவான் நற்செய்தியில் இடம்பேரும் இலாசர் உயிர்த்தெழுதல் நிகழ்வின்போது இயேசு மார்த்தாவிடம் கேட்ட, "இதை நீ நம்புகிறாயா?" என்ற இறைவார்த்தையானது கருப்பொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

## தீபகச் சுடர் வாசகர்களுக்கு

**தீபகச் சுடர் புத்தகம் வாங்க விரும்புபவர்கள் சந்தா தொகை ரூ. 200/- செலுத்தி புதுப்பித்துக் கொண்டு, தங்களின் முகவரி, பின்கோடு எண் போன்றவற்றை தெளிவாக எழுதி, எங்களின் அலுவலகத்திற்கு அனுப்பினால்தான் மாத இதழைத் தொடர்ந்து அனுப்ப உதவியாக இருக்கும் என்பதை தெரியப்படுத்துகிறோம்.**

## சுடர் வாசகர் போட்டி - 118

1. உரோ. 6:23
2. பெனடிக்டுஸ் தே டிலனாய் (Benedictus De Lennoy)
3. புனித தாமஸ் அக்குவினாஸ்
4. புனித மெர்சி ஆஞ்ஞேசம்மாள்
5. யூத மத ரபி
6. புனித லவுரா விகூஞா
7. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவருக்கு 2002-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் நாள் அருளாளர் பட்டம் வழங்கினார்.
8. தந்தை இறைவன்
9. பிரான்சிஸ்கு சலேசியார்
10. நீலகண்டன்
11. புனித தாமஸ் அக்குவினாஸ்
12. புனித பவுல்
13. புனித பிரான்சிஸ்கு சலேசியார்
14. ஐரீன்
15. பியட்ரோ வரியாரா, லவியா புஸ்ஸா

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

A. George Stephen, Villupuram

Sr. Ferrera, Salem

C. Pauline Soosainathan, Maduranthagam

## சுடர் வாசகர் போட்டி 119

1. மீட்பு என்பது எத்தனை அனுவங்களைக் கொண்டது என்று ஆசிரியர் கூறுகிறார்?
2. புனித பெர்னதெத்துக்கு அன்னை எத்தனை முறை காட்சி தந்தார்?
3. "திருஅவையின் மறைவல்லுநர்" என்று அழைக்கப்பட்டவர் யார்?
4. "ஸ்லாவிக்" மொழியில் விவிலியம் முழுவதையும் மொழிபெயர்த்தவர் யார்?
5. அன்னை மரியாளை "அமல உற்பவி" என்று அறிவித்த திருத்தந்தை யார்?
6. "எங்கள் கருப்புத் தாய்" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர் யார்?
7. புனித அருளானந்தர் எங்கு எப்படி இறந்தார்?
8. "உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும்" யார் யாரிடம் கூறியது?
9. அருளாளர் யுசேபியுஸ் தீர்க்க தரிசமாக சொன்ன செய்தி என்ன?
10. புனித கலிஸ்துஸ் கரவாரியோவை குருவாக திருநிலைப்படுத்தியவர் யார்?
11. அன்னையின் ஊழியர் சபையை உருவாக்கிய ஏழு பேரின் பெயர்கள் என்ன?
12. "பொதுத்தீர்வை" படத்தை வரைந்து மன்னனை மனம் மாற்றிய புனிதர் யார்?
13. புனித ஆசீர்வாதப்பரின் தங்கை யார்?
14. "ததேயும்" என்றால் என்ன?
15. புனித ஜான் தெ பிரிட்டோ தனது பெயரை அருளானந்தர் என்று எங்கு மாற்றிக்கொண்டார்?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
..............................
..............................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பொதுக்காலம் 8ம் ஞாயிறு
புனித கசிமீர்
திருநீற்று புதன்
புனித பெர்பெத்துவா, பெசிலிட்டி
தவக்காலம் முதல் ஞாயிறு
தவக்காலம் 2ம் ஞாயிறு
புனித யோசேப்பு - கன்னி மரியாவின் கணவர் பெருவிழா
இயேசுவின் இருதயத்தின் புனித மரிய ஜோசிபா
தவக்காலம் 3ம் ஞாயிறு
ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு பெருவிழா
புனித லட்ஜர்
எகிப்து நாட்டு புனித யோவான்
புனித ஜோனஸ், பராசிசியஸ் துறவிகள்
தவக்காலம் 4ம் ஞாயிறு

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புனிதத்தில் வழிநடத்தும் தவமும், ஒறுத்தலும்
கன்னி மரியாவின் கணவர் புனித யோசேப்பு: நம் குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டி
புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி"பதில்களை பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# பிப்ரவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ச | புனித ஹென்றி மோர்ஸ் | எபி. 11: 1-2, 8-19 | மாற்கு 4:35-41 |
| 2 | **ஞா** | **ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா** | **I.** மலா. 3: 1-4<br>**II.** எபி. 2: 14-18 | லூக். 2: 22-40 |
| 3 | தி | புனித ப்ளேஸ் மற்றும் புனித ஆஸ்கார் | எபி. 11: 32-40 | மாற்கு 5: 1-20 |
| 4 | செ | புனித ஜான் தெ பிரிட்டோ (அருளானந்தர்) | எபி. 13: 15-17,20-21 | யோவா. 12: 24-26 |
| 5 | பு | புனித ஆகத்தா | எபி. 12: 4-7, 11-15 | மாற்கு 6: 1-6 |
| 6 | வி | புனிதர்கள் பவுல் மீக்கியும், தோழர்களும் | எபி. 12: 18-19, 21-24 | மாற்கு 6: 7-13 |
| 7 | வெ | புனித கொன்சாலோ கார்சியா விழா | சீராக் 51: 1-8 | மத். 28: 16-20 |
| 8 | ச | புனித எரோணிமுஸ் எமிலியானி, ஜோசபின் பக்கீத்தா | எபி. 13: 15-17, 20-21 | மாற்கு 6: 30-34 |
| 9 | **ஞா** | **பொதுக்காலம் 5ம் ஞாயிறு** | **I.** எசா. 6: 1-8<br>**II.** 1கொரி. 15: 1-11 | லூக். : 5-1-11 |
| 10 | தி | புனித ஸ்கொலாஸ்திகா | தொ.நூ. 1: 1-19 | மாற்கு 8: 53-56 |
| 11 | செ | லூர்து நகர் புனித அன்னை மரியா | தொ.நூ. 1: 20-2:4 | மாற்கு 7: 1-13 |
| 12 | பு | புனித அல்பினிட்டா | தொ.நூ. 2: 4-9,15-17 | மாற்கு 7: 14-23 |
| 13 | வி | புனித கத்ரின் தே ரிச்சி | தொ.நூ. 2: 18-25 | மாற்கு 7: 24-30 |
| 14 | வெ | புனிதர்கள் சிரில் மடத்துத் துறவி மெத்தோடியஸ் | தொ.நூ. 3:1-8 | மாற்கு 7: 31-37 |
| 15 | ச | புனித ஃபாஸ்டினுஸ் ஜோவிட்டா | தொ.நூ. 3: 9-24 | மாற்கு 8: 1-10 |
| 16 | **ஞா** | **பொதுக்காலம் 6ம் ஞாயிறு** | **I.** எரே. 17: 5-8<br>**II.** 1கொரி. 15: 12, 16-20 | லூக். 6: 17, 20-26 |
| 17 | தி | புனித கன்னி மரியாவின் ஊழியர் துறவுஅவையை நிறுவிய புனிதர் எழுவர் | தொ.நூ. 4:1-15,25 | மாற்கு 8: 11-13 |
| 18 | செ | புனித குரியாகோஸ் எலியாஸ் சாவரா | தொ.நூ. 6: 5-8, 7:1-5,10 | மாற்கு 8: 14-21 |
| 19 | பு | புனித கொன்ராார்டு பியாசென்னா | தொ.நூ. 8: 6-13, 20-22 | மாற்கு 8: 22-26 |
| 20 | வி | புனிதர்கள் பிரான்சிஸ்கோ ஜெசிந்தா மார்டோ | தொ.நூ. 9: 1-13 | மாற்கு 8: 27-33 |
| 21 | வெ | புனித பீட்டர் தமியான் | தொ.நூ. 11: 1-9 | மாற்கு 8: 4-9:1 |
| 22 | ச | திருத்தூதர் புனித பேதுருவின் தலைமைப்பீடம் விழா | 1பேதுரு 5: 1-4 | மத். 16: 13-19 |
| 23 | **ஞா** | **பொதுக்காலம் 7ம் ஞாயிறு** | **I. 1**சாமு.26:2,7-9,12-13,22-23<br>**II.** 1கொரி. 15: 45-49 | லூக். 6: 27-38 |
| 24 | தி | ஆர்லஸ் நகர் புனித செசாரியஸ் | சீராக். 1: 1-10 | மாற்கு 9: 14-29 |
| 25 | செ | அருளாளர் கலிஸ்துஸ் கரவாரியோ மற்றும் | சீராக். 2: 1-11 | மாற்கு 9: 30-37 |
| 26 | பு | புனித மெக்டைட் | சீராக். 4: 11-19 | மாற்கு 9: 38-40 |
| 27 | வி | நாரெக் நகர் புனித கிரகோரியார் | சீராக். 5: 1-8 | மாற்கு 9: 41-50 |
| 28 | வெ | அலெக்சாந்திரியா நகர் மறைச்சாட்சிகள் | சீராக். 6: 5-17 | மாற்கு 10: 1-12 |

# தீபகம் – தொன் போஸ்கோ
## நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

TO SHARE THE LIGHT

வழங்கும்

# இயேசுவும் நானும்



5 மேடைகள்
30 கலைஞர்கள்
60 நிமிடங்களில்

**தவக்காலச் சிறப்பு ஒலி–ஒளி நிகழ்ச்சி**

**ஆண்டவரின் பாடுகளின் வாயிலான ஓர் ஆன்மீகத் தேடல்!**

உங்கள் பங்குகளில் அரங்கேறத் தொடர்பு கொள்க :

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச. அலைபேசி 9840263623





தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10